**கவனிக்க.**- 2010.06.18 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**-இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் காலி நீதிமன்றத்திற்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்கள மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1660 - 2010 ජූනි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.24

*1660 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1204 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1204 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1205 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 89

**தேசிய மாணவ வீரர் படையணி**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல்கள்

(அ) 2008, ஒகத்து மாதம் 25 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் ஆக.

அ/6349 2/லெப்டினன்ட் சிஎஸ்கே கருணாரத்ன

(ஆ) 2008 செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் ஆக.
அ/5271 2/லெப்டினன்ட் எல்பியூ ஷான்த

(இ) 2009 யூன் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் ஆக.
அ/6376 2/லெப்டினன்ட் வைஎம்எச்கே அபேகோன்
அ/6378 2/லெப்டினன்ட் பிஎச்எஸ்கே சுமனசேன
அ/6379 2/லெப்டினன்ட் எஸ்எப்டீ மர்தீனு
அ/6380 2/லெப்டினன்ட் ஜே சுணில்
அ/6382 2/லெப்டினன்ட் ஓடப்லிவ் ஜோர்ஜ்
அ/6383 2/லெப்டினன்ட் எச்கே விக்கிரமநாயக்க
அ/6386 2/லெப்டினன்ட் ஏஜிஜே ரத்நாயக
அ/6387 2/லெப்டினன்ட் எம்பீ விஜேநாயக
அ/6389 2/லெப்டினன்ட் எம்டிடிஎஸ் சமின்த
அ/6391 2/லெப்டினன்ட் டப்ளிவ் ஷ்ரியானி (பெண்)
அ/6393 2/லெப்டினன்ட் டீஜீஎஸ்கே அம்பதென்ன
அ/6397 2/லெப்டினன்ட் ஏஎம்ஜீசீபி அபேசிங்க
அ/6400 2/லெப்டினன்ட் என்பி நிகமுனி
அ/6403 2/லெப்டினன்ட் ஏஎச்ஏஎஸ் அமுனுகம
அ/6405 2/லெப்டினன்ட் ஏம்பி வீரசேகர
அ/6406 2/லெப்டினன்ட் கேஜிவிகே குணவர்தன
அ/6407 2/லெப்டினன்ட் எச்ஏடபிளிவ்கே ஹபுஆரச்சி
அ/6412 2/லெப்டினன்ட் டீஏ டி சில்வா
அ/6414 2/லெப்டினன்ட் எஸ்எம்டீ பிரசங்க
அ/6415 2/லெப்டினன்ட் ஏஎம்ஆர்பிகே குணசேகர
அ/6417 2/லெப்டினன்ட் எம்ஆர்டி தலகொடுவ
அ/6418 2/லெப்டினன்ட் யூஜீஏசீ எதிரிசிங்க
அ/6419 2/லெப்டினன்ட் டீஜீ ஷான்த
அ/6420 2/லெப்டினன்ட் டீடப்டலிவ்ஏகே தலாபொலவத்த
அ/6421 2/லெப்டினன்ட் டீஎம்பீ திசாநாயக
அ/6424 2/லெப்டினன்ட் கேஎம்பீடபிளிவ் சந்திரகுமார
அ/6426 2/லெப்டினன்ட் ஐடீ சூரியஆரச்சி (பெண்)
அ/6428 2/லெப்டினன்ட் சீபீஏ சந்திரரத்ன
அ/6429 2/லெப்டினன்ட் ஐசீஜீ விஜேசிங்க (பெண்)
அ/6431 2/லெப்டினன்ட் பீஎஸ்எஸ். ஜயசிங்க
அ/6433 2/லெப்டினன்ட் கேஜீ திம்புல்கும்புர (பெண்)
அ/6436 2/லெப்டினன்ட் ஆர்எம்கே ஐராங்கனீ (பெண்)

(ஈ) 2009 ஒகத்து மாதம் 30 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் ஆக

அ/5362 2/லெப்டினன்ட் கேடீ பிரேமரத்ன
அ/6122 2/லெப்டினன்ட் எச்எம் தனபால
அ/6271 2/லெப்டினன்ட் டபிள்யூஎம்எஸ்ஆர் பனேன்டோ (பெண்)
அ/6299 2/லெப்டினன்ட் ஜேஎம்என் ஜயகொடி
அ/6312 2/லெப்டினன்ட் எச்எம்ஆர் புஷ்பகுமார
அ/6317 2/லெப்டினன்ட் எம்ஆர் தஹநாயக
அ/6336 2/லெப்டினன்ட் பீஏ சிரிசோம
அ/6355 2/லெப்டினன்ட் எம்ஜிடீ விக்கிரமசிங்க
அ/6384 2/லெப்டினன்ட் கேடீஎம் டி சொய்சா
அ/6395 2/லெப்டினன்ட் ஆர்எம்ஏகே ரத்னாயக
அ/6399 2/லெப்டினன்ட் ஈஏஆர் மிணிருவன்
அ/6408 2/லெப்டினன்ட் டீகஎச்பீஎம்பீ குசும்சிரி
அ/6410 2/லெப்டினன்ட் எம்ஜீஎல்ஆர் பண்டார
அ/6413 2/லெப்டினன்ட் ஆர்எம்எஸ் ராஜபக்ஷ
அ/6416 2/லெப்டினன்ட் பீசீஎஸ்எஸ் டி சில்வா
அ/6432 2/லெப்டினன்ட் எஸ்ஏடீஎன் சுபசிங்க

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010,

6-481

# அரசாங்க அறிவித்தல்கள்

**முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் - 2010**

மேற்படி உற்சவம் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு ஆரம்பமாகி 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு முடிவடையும் என்பது பொது மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

2. 1949.05.27 ஆந் திகதியும் 9978 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 1950.05.26 ஆந் திகதியும் 10105 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொது மக்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

3. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின் போது அமுல்படுத்தப்படும்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

2010, யூன் 01.

6-480

**2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*34(2) (அ) பிரிவின் கீழான அறிவித்தல்*

2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 34(2) (அ) பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள "ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவனத்தின் ஜகத்தலா சிறுவர் அபிவிருத்தி நிலையம்" அப்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாக இத்தால் அறிவிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஸ,
நிதி திட்டமிடல் அமைச்சர்.

நிதி திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.
2010, யூன் 08.

**அட்டவணை**

"ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவனத்தின் ஜகத்தலா சிறுவர் அபிவிருத்தி நிலையம்"

6- 548

---

**மாத்தறை தொட்டமுனை போஸொன் பெரஹரா**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் 2009 ஆம் ஆண்டின் பொஸொன் பெரஹரா 2010, யூன் மாதம் 25 ஆந் திகதி நடைபெறும் என பயண யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 175 ஆம் அத்தியாயம் 1959, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 11959 ஆம் இலக்க கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளின் 10 ஆம் பிரிவின் கீழ் அறியத் தருகிறேன்.

துசித பி. வணிகசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

மாத்தறை பிரதேச அலுவலகம்,
2010, சித்திரை 07.

6-528

---

**யாத்திரிகை விதிமுறை**

*மாமாங்கப் பிள்ளையார் ஆலயத் திருவிழா, மட்டக்களப்பு மாவட்டம் - 2010*

இவ் ஆலயத் திருவிழாவிற்குச் சமுகம் கொடுக்கும் யாத்திரீகர்களுக்கும், மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்,

மேற்படி ஆலயத் திருவிழா 2010.07.31 ஆந் திகதி ஆரம்பமாகி 2010.08.09 ஆந் திகதி முடிவடையும். அதில் பங்குபற்றும் யாத்திரீகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் 1948 ஆம் ஆண்டு ஆடி மாதம் 16 ஆந் திகதிய 9886 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச வர்த்தமானியின் விதிகள் ஆலயத் திருவிழா முடிடையும்வரை அமுலில் இருக்கும்.

(திருமதி) க. பத்மராஜா,
பிரதேச செயலாளர்.
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு

டீஎஸ்/எம்என்/எஸ்எஸ்/சியுஎல்/04.
02.06.2010.

6-469

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

வசந்த அணுர சாந்த டீ சில்வா அபேவீர குணசேகர மற்றும் ஓட்ரி லொரெட்டா டீ சில்வா அபேவீர குணசேகர

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் 2009, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இல. 30/ 3, பெல்லன்வில வீதி, திவுலபிட்டிய, பொரலஸ்கமுவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஓட்ரி லொரெட்டா டீ சில்வா அபேவீர குணசேகர (இதனகத்துப் பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஹெந்தவிதாரனகே சந்திரகுமார் டீ சில்வா அத்தாட்சிப்படுத்திய 2005, யூலை 01 ஆந் திகதி கொண்ட 327 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் சார்பில் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) மேற்படி வசந்த அணுர சாந்த டீ சில்வா அபேவீர குணசேகர மற்றும் ஓட்ரி லொரெட்டா டீ சில்வா அபேவீர குணசேகர ஆகியோரால் (இதனகத்துப் பின்னர் கடனெடுத்தவர்கள் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார். ஆதலாலும்,

சொல்லப்பட்ட கடனெடுத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை

தவறியுள்ளனர். ஆதலால், இப்பொழுது 31.03.2009 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின் மீது பதின்மூன்று இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து இருபத்து நான்கு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 13,64,024.27) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலாலும்,

பதின்மூன்று இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து இருபத்து நான்கு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 13,64,024.27) 31.03.2009 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன் மீது நிலுவையிலிருக்கும் முதல் பன்னிரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று எட்டு ரூபா ஐம்பத்துமூன்று சதத்தின் மீது (ரூ. 12,41,398.53) 01.04.2009 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 31.75% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. இஹலகே கிறிஸ்டி அலஸ்டர் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட பத்தரமுல்லயில் அமைந்துள்ளதும் கெமுனு மாவத்தை, 32/4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் நாரங்கஹாஹேன என அழைக்கப்படுவதுமான காணியில் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பி. அபேநாயக தயாரித்த 2003, சனவரி 11 ஆந் திகதி கொண்ட 3289 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 20A என்பதன் மறுநில அளவையாகிய) துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : கெமுனு மாவத்தை மற்றும் 3289 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு $20^B$; கிழக்கில் : 3289 ஆம் இலகக் வரைபடத்திலுள்ள துண்டு $20^B$ மற்றும் 510 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 27 ; தெற்கில் : 510 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 27 மற்றும் கெமுனு மாவத்தை 55/30 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் ; மேற்கில் : கெமுனு மாவத்தை 55/30 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் என்பன அமைந்துள்ளன. உத்தரபெற்ற நிலஅளயைாளர் டீ. டீ. சீ. ஹீன்தெனிய தயாரித்த 2005, மாச்சு 2 ஆந் திகதி கொண்ட 2526 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டப்படி இதன் பரப்பளவு பதினாலு தசம் நாலு நாலு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.44பே.) அல்லது 0.0365 ஹெக்டேயர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

6-588

### செலான் வங்கி ப.வ.க.

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 9957 -330430-001 (தனியார் வங்கித்தொழில் அலகு)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.02.16 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''நுகேகொடையைச் சேர்ந்த ரணில் சிந்தன் வாகிஸ்வர ''கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. தெபுலங்கொட என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, நவெம்பர் 03 ஆந் தேதிய 611, 2004, செத்தெம்பர் 8 ஆந் திகதிய 766, 2005, திசெம்பர் 16 ஆந் திகதிய 869 மற்றும் பிரசித்த நொத்தாரிசு பீ. ஜி. இந்திகஹவெலையால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூலை 29 ஆந் திகதிய 09 மற்றும் 2005, திசெம்பர் 16 ஆந் திகதிய 43 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவனை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2009, ஓகத்து 14 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது மூன்று கோடியே எண்பத்தேழு இலட்சத்து ஓராயிரத்து ஐநூற்று ஐந்து ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 3,87,01,505.92) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 3,87,01,505.92 பணத்தொகையையும் 2009, ஓகத்து 15 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 611, 766, 869, 09 மற்றும் 43 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது''

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தினுள்ளும் மாநகரத்தினுள்ளும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ளதும் 39, டீன்ஸ்ரோன் பிளேஸ் என்ற வரி மதிப்பீட்டிலக்கம் கொண்டதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பீ. மலோனியால் தயாரிக்கப்பட்ட 1946.11.28 ஆந் திகதிய வரைபடம் இல. 1515 இல் காட்டப்பட்ட 39, டீன்ஸ்ரோன் பிளேஸ் என்ற வரிமதிப்பீட்டிலக்கத்தின் மீள் அளவீடாயுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சி. சேனாரத்னவால்

*தயாரிக்கப்பட்ட 2003.10.20 ஆந் திகதிய 3943 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு: வளவு இல. 16, டீல் பிளேஸ் A ; கிழக்கு : வளவு இல. 45 டீன்ரோன் பிளேஸ்; தெற்கு : டீன்ஸ்ரோன் பிளேஸ் ; மேற்கு : இல. 37, டீன்ஸ்ரோன் பிளேஸ். சொல்லப்பட்ட 3943 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதின்மூன்று தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.25பே.) அல்லது (0.03351 ஹெக்டேயர்) விஸ்தீரணம் கொண்ட இது கொழும்பு காணிப் பதிவகத்தில் A 1032/57 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

### இரண்டாம் அட்டவணை

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளினுள் கங்கொடவிலையில் அமைந்துள்ளதும் 85 மற்றும் 85 1/1, ஜம்புகஸ்முல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கங்கள் கொண்டதும் "கஹட்டகஹவத்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. ஏ. குணவர்தனவால் தயாரிக்கப்பட்ட 1970, யூன் 13 ஆந் திகதிய 1204 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 75A2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 75A2 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 75A1 ; கிழக்கு : வீடுகளுக்கான வீதி ; தெற்கு : ஜம்புகஸ்முல்ல வீதி ; மேற்கு : 83, ஜம்புகஸ்முல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவு. சொல்லப்பட்ட 1204 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தைந்து தசம் எட்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25.85பே.) விஸ்தீரணம் கொண்ட இது கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 1424/252 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கூடிய அண்மைக்கால நிலஅளவையின்படி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டி. பெல்லனவால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 1 ஆந் திகதிய வரைபடம் இல. 992/2004 இல் துண்டு A எனக்குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட சொல்லப்பட்ட துண்டு 75A2 கீழே பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-*

*மேலே சொல்லப்பட்ட கங்கொடவிலையில் அமைந்துள்ளதும் 85 மற்றும் 85 1/1, ஜம்புகஸ்முல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கங்கள் கொண்டதும் "கஹட்டகஹவத்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டி. பெல்லனவால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 1 ஆந் திகதிய 992/ 2004 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு A இன் எல்லைகள் - வடக்கு : 85/ 1A, ஜம்புகஸ்முல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவு ; கிழக்கு : வீதி ; தெற்கு : ஜம்புகஸ்முல்ல வீதி ; மேற்கு : 83, ஜம்புகஸ்முல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவு. சொல்லப்பட்ட . 992/ 2004 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தைந்து தசம் எட்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25.85பே.) விஸ்தீரணம் கொண்டது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*சீ.கொட்டிகல,*
*சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்*

*6-619*

---

## இ. அ. நி. கூ. வங்கி

*(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)*

### *1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*"சரத் ஹார்ட்வியார்" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தொழில் கொண்டு நடத்துகின்ற மிஹிந்தலையைச் சேர்ந்த பட்டபன்டி, மத்துமகே சரத் மறுபெயர் பட்டபன்டி மத்துமகே சரத் டி சில்வா என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. என். ஏ. குரேரா என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, யூலை 17 ஆந் திகதிய 1526 ஆம் மற்றும் 2003, யூலை 18 ஆந் திகதிய 1531 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், மேற்கூறப்பட்ட 1526 ஆம் மற்றும் 1531 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2010, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக இருபத்தெட்டு இலட்சத்த எண்பத்தாறாயிரத்து நாநூற்று பத்தொன்பது ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 28,86,419.43) கொண்ட தொகையும் 2010, பெப்புருவரி 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 2,70,600) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் அத்துடன் இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுககு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் சொல்லப்பட்ட பட்டபன்டி மத்துமகே சரத் மறுபெயர் பட்டபன்டி மத்துமகே சரத் டி சில்வா என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் அதன்மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்தவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள் செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தெட்டு இலட்சத்த எண்பத்தாறாயிரத்து நாறுநூற்று பத்தொன்பது ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 28,86,419.43) கொண்ட தொகையும் 2010, பெப்புருவரி 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து*

எழுபதாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 2,70,600) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் அத்துடன் இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுககு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1526 ஆம் மற்றும் 1531 ஆம் இலக்கங்களைக் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் பட்டபன்டி மத்துமகே சரத் மறுபெயர் பட்டபன்டி மத்துமகே சரத் டி சில்வா என்பவரினால், இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1526 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம், மாவட்டத்திலுள்ள நுவரகம் பலாத்தவில் நுவரகம் கோறளையின் நுவரகம் பலாத்த கிழக்கின் உதவி பிரதேச செயலாளர் பிரிவில் அநுராதபுரம் நகர சபை எல்லைகளினுள் கட்டம் 1 இல் அமைந்துள்தும், 1996.12.01 ஆந் திகதிய 1821 ஆம் இலக்க வரைபடத்தில் 38 ஆம் வரிமமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், காணித்துண்டும் இல. 01 என அடையாளமிடப்பட்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. ஆரியசேன என்பவரினாலான மீள்நிலஅளவையின்படி நுவரவெவ/கெலே எனவழைக்கப்படும் காணியினதாய் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட இறுதி நகர வரைபட இல. இநவ ஏ2 இல் காணித்துண்டம் 56 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் 8 1/2; கிழக்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் இல. 55 1/2; தெற்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் இல. 66 1/2 மற்றும் ; மேற்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் இல. 57, பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் நான்கு தசம் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 4.2பே.) அல்லது (0.0106ஹெக்.) கொண்டுள்ளது.

மிக்க அண்மைக்காலத்திய நிலஅளவையின்படி இக்காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம், மாவட்டத்தில் நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அநுராதபுரம் மாநகர சபை எல்லைகளினுள் அநுராதபுரம் புதிய பட்டினத்தின் கட்டம் 1 இல் அமைந்துள்ளதும், 6 ஆம் வட்டாரத்தில் 38 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட இ. ந. வ. ஏ2 இல் காணித்துண்டும் 56 எனக் குறிக்கப்பட்டதும், நுவரவெவகெலே எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. ஆரியசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.08.11 ஆந் திகதிய 2225ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1 என அடையாளிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் 8 1/2; கிழக்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் இல. 55 1/2; தெற்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் இல. 66 1/2 மற்றும் ; மேற்கில் : இநவ ஏ2 இலுள்ள காணித்துண்டம் இல. 57, பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் நான்கு தசம் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 4.2பே.) அல்லது (0.0106ஹெக்.) கொண்டுள்ளது.

### 1531 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

அநுராதபுரம், மார்க்கெட் சைட்டிலுள்ள 76 ஆம் இலக்கத்தில் களஞ்சியப்படுத்தப்படும் ஹார்ட்வியார் பண்டங்கள்.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

6-618/2

---

### செலான் வங்கி ப.வ.க.

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0120 -01571083-001 (நுகேகொடை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"நுகேகொடையில் N(PVS) 20493 என்ற வியாபாரப் பதிவிலக்கம் கொண்டதாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான 'சீக்கோ காஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் நுகோடையைச் சேர்ந்த சிமித் நிமலசிறி விஜேசிங்க ஏக்கநாயக்க "கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு திலினி பீ. கருணாசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, திசெம்பர் 15 ஆந் திகதிய 976, 977 மற்றும் 978 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவனை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, செத்தெம்பர் 16 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது ஐந்து கோடியே எழுபத்தைந்து இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்றுநாற்பத்தெட்டு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 5,75,59,148.59) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால்

சொல்லப்பட்ட ரூபா 5,75,59,148.59 பணத்தொகையையும் 2009, செத்தெம்பர் 17 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது சதவீதப்படி (29%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 976, 977 மற்றும் 978 ஆம் இலக்க முறிகளினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம் இரண்டாம், மூன்றாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது"

## முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், சிலாபம் மாவட்டத்தில் பிட்டிகல் கோறளை வடக்கின் முன்னேஸ்வரம் பத்துவில் மாதம்பே தெமட்டபிட்டிய மற்றும் கீனகஸ்வில கிராமத்தில் அமைந்துள்ள "தீனகஸ்வில எஸ்ரேட்" என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1959.04.27 ஆந் திகதிய 5533 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு A' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இன் எல்லைகள் - வடக்கு : சிறில் ரத்நாயக்கவின் இப்போது நிக்கலஸ் பர்னாந்துவின் காணி ; கிழக்கு : ஷெல்ரன் விக்கிரமநாயக்கவினதும் அகஸ்ரின் பர்னாந்துவின் உரித்தாளிகளினதும் காணிகள் முன்னர் நிலஅளவையாளர் ஏ. எம். பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1952.07.17 ஆந்திகதிய வரைபடம் இல. 4168 இல் துண்டு B ; தெற்கு : காக்கா பள்ளியவிலிருந்து பலு பிங்கிரியவுக்கான பிரதான வீதி; மேற்கு : என். எம். பாரூக்கின் காணி முன்னர் வரைபடம் இல. 4168 இல் துண்டு A. முப்பது ஏக்கர் (30ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்ட இது சிலாபம் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் C151/27 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட துண்டு A இப்போது மீள அளவிடப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையார் டபிள்யூ. ஏ. சிறிசேனவால் தயாரிக்கப்பட்ட 2004.10.24 ஆந் திகதிய வரைபடம் இல. 3067 இல் காட்டப்பட்டுப் பின்வருமாறு முழுமையாக விவரிக்கப்படுகின்றது:-

புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பதிவுப் பிரிவினுள் பிட்டிகல் கோறளை வடக்கிலும் மெதகம தெமட்டபிட்டிய கிராமத்திலும் அமைந்துள்ள 'கீனகஸ்வில எஸ்ரேட்' என்ற அழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. சிறிசேனவால் தயாரிக்கப்பட்ட 2004.10.24 ஆந் திகதிய 3067 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு 1' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : காலஞ்சென்ற நிக்கலஸ் பர்னாந்துவின் உரித்தாளிகளின் காணி; கிழக்கு : காலஞ்சென்ற ஷெல்ரன் விக்கிரமநாயக்கவின் உரித்தாளிகளின் காணி மற்றும் வரைபடம் இல. 4168 இல் துண்டு B மற்றும் மஹிந்த ஜயதிலக்கவின் காணி ; தெற்கு : காக்கா பள்ளியவிலிருந்து பலு பிங்கிரியவுக்கான வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ; மேற்கு : வரைபடம்இல. 4168 இல் துண்டு A மற்றும் ஹியு பர்னாந்துவின் காணி. சொல்லப்பட்ட 3067 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பது ஏக்கர் (30ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்டது.

## இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில் பள்ளே பத்துவில் பனாகொட கிராமத்தில் அமைந்துள்ள 'ரெம்பிள்ஸ்பேர்க் எஸ்ரேட்' என்றழைக்கப்படும் காணி தொடர்பில் (நிலஅளவையாளர் நாயகத்தால்தயாரிக்கப்பட்ட பிரிவினை வரைபடம் 7919 இன் மீள் அளவீடாயுள்ள) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டபிள்யூ. டி. சந்திராணியால் தயாரிக்கப்பட்ட 2003.09.03 ஆந் திகதிய 569 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு 1' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு 8 இன் பகுதி (வீதி) மற்றும் PP Co 7919 இல் துண்டு 9 ; கிழக்கு : துண்டு 8 இன் பகுதி (வீதி) மற்றும் PP Co 7919 இல் துண்டு 7; தெற்கு : துண்டு 8 இன் பகுதி (வீதி) மற்றும் PP Co 7919 இல் துண்டு 9; மேற்கு : துண்டு 8 இன் பகுதி (வீதி) மற்றும் PP Co 7919 இல் துண்டு 9. சொல்லப்பட்ட 569 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு முப்பத்து நான்கு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (1ஏ. 0றூ. 34.60பே.) விஸ்தீரணம் கொண்ட இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 1495/61 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மூன்றாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவில் கோட்டே நகர சபை எல்லைகளினுள் நுகேகொடையில் முன்னர் ஸ்டேஷன் வீதி என்று அழைக்கப்பட்ட ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தையை அண்டியதாக அமைந்துள்ள 'கொட்டனுவே கும்குர' என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரியவால் தயாரிக்கப்பட்ட 1973.01.27 ஆந் திகதிய 415 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு 4A' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு 4B ; கிழக்கு : வரைபடம் இல. 3130A இல் துண்டு A ; தெற்கு : நுகேகொடையில் இருந்து பொரளைக்கான பிரதான வீதி ; மேற்கு : வரைபடம் இல. 3130A இல் துண்டு 3. இருபத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணம் கொண்ட இது கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 1038/286 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட துண்டு 4A (வீதி அகலப்படுத்துவதற்காகச் சுவீகரிக்கப்பட்ட பின்னர் துண்டு 4A இன் பரப்பு) மீள அளவிடப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்காரவால் தயாரிக்கப்பட்ட 1979.09.02 ஆந் திகதிய 1507 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டு பின்வருமாறு முழுமையாக விவரிக்கப்படு கின்றது:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவில் கோட்டே நகர சபை எல்லைகளினுள் நுகேகொடையில் முன்னர் ஸ்டேஷன் வீதி என்று அழைக்கப்பட்ட ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தையை அண்டியதாக அமைந்துள்ள 'கொட்டனுவே கும்குர' என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்காரவால் தயாரிக்கப்பட்ட 1979.09.02 ஆந் திகதிய 1507 ஆம் இலக்க வரைபடத்தில் 'துண்டு 4A1' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிபங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடகிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஈ. விஜேசூரியவால் தயாரிக்கப்பட்ட 1973.01.27 ஆந் திகதிய வரைபடம் இல. 415 இல் துண்டு 4 இன் துண்டு 4B இப்போது கே. டி. லீலாவதியின் உரித்தாளிகளினது; தென்கிழக்கு : உத்தரவுபெற்ற

நிலஅளவையாளர் வி. ஏ. எல். சேனாரத்னவால் தயாரிக்கப்பட்ட 1966.11.29 ஆந் திகதிய வரைபடம் இல. 3130A இல் துண்டு A (ஒரு வீதிக்கான ஒதுக்கம்) ; தென்மேற்கு : ஸ்ரான்லி திலகரத்ன மாவத்த (முன்னர் ஸ்டேஷன் வீதி என்று அழைக்கப்பட்டது) ; வடமேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவயையாளர் வி. ஏ. எல். சேனாரத்னவால் தயாரிக்கப்பட்ட 1966.11.29 ஆந் திகதிய வரைபடம் இல. 3130A இல் துண்டு 3. இப்போது கே. டி. ஜயசேனவினது சொல்லப்பட்ட 1507 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது இருபத்துமூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணம் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்

6-620/1

---

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0040 -122532-001 மற்றும் 0864-040269-001
(மஹரகமை கிளை மற்றும் கூட்டாண்மை வங்கித் தொழில் அலகு)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.04.06 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொட்டாவையில் W 43181 என்ற வியாபாரப் பதிவிலக்கம் கொண்டதாக "குமுத் என்ரபிறைசஸ்" என்ற பெயர்மகுடத்தினதும் நிறுவனத்தினதும் ஏக உரிமையாளராக வியாபாரம் நடத்துகின்ற துஷான் ரத்னபால மாபட்டுன "கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு பீ. ஆர். த லிவேராவால் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1994, ஒற்றோபர் 04 ஆந் திகதிய 2503, பிரசித்த நொத்தாரிசு ஏ. டபிள்யூ. ஏ. இம்மனுவேலால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1996, மே 17 ஆந் திகதிய 1326,˙ பிரசித்த நொத்தாரிசு டி. பீ. எல். எச். எச். சில்வாவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட1996, நவெம்பர் 19 ஆந் திகதிய 84, பிரசித்த நொத்தாரிசு எம். ஈ. எஸ். பீரிசால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, செத்தெம்பர் 5 ஆந் திகதிய 95, பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். ஆர். ராஜகருணாவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, யூலை 24 ஆந்திகதிய 375, பிரசித்த நொத்தாரிசு ஜி. ஏ. சி. பெரேராவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, யூலை 3 ஆந் திகதி 509, பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். என். ˙. ராஜகருணாவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, யூலை 24 ஆந் திகதிய 376 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஜி. ஏ. சி. பெரேராவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, யூலை 3 ஆந் திகதிய 510 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவனை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2009, திசெம்பர் 20 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது நான்கு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து நூற்று எண்பத்தொரு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 4,92,95,181.39) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 4,92,95,181.39 பணத்தொகையையும் 2009, திசெம்பர் 21 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது சதவீதப்படி (29%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 375, 509, 376, 510, 2503, 1326, 84 மற்றும் 95 ஆம் இலக்க முறிகளினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம் இரண்டாம், மூன்றாம், நான்காம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது"

**முதலாம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின், பள்ளே பத்துவில் பொல்வத்தையில் அமைந்துள்ள அறுபோகஹவத்த, கெட்டகெலகஹவத்த மற்றும் முனமல்கஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். த சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 7 ஆந் திகதிய 10851 ஆம் இலக்க வரைபடத்தில் துண் 3 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிபங்கீடு முழுவதும். இதன் எல்லைகள்- வடக்கு : துண்டு 2 ; கிழக்கு : துண்டு 5 ; தெற்கு : துண்டு 4 ; மேற்கு : வரைபடம் இல. 8027 இல் துண்டு 1C சொல்லப்பட்ட 10851 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினேழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணம் கொண்ட இது தெல்கந்த காணிப் பதிவகத்தில் M 1998/88 ஆம் உரித்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பின்வருவதன் மேலாகவும் கீழாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக :-

1. மேலேசொல்லப்பட்ட 10851 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5 மற்றும் துண்டு 1 (வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். முறையே பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.0253 மற்றும் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6பே.) 0.0152 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்ட இது தெல்கந்த காணிப் பதிவகத்தில் M 1995/114 மற்றும் M 1998/200B என்ற உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனுடன் வரைபடம் இல. 10851 இல் காட்டப்படட துண்டு 1 (வீதிக்கான ஒதுக்கம்) உடன் தொடர்புடைய பன்னிரண்டு அடி அகலமான வீதி ஒதுக்கத்தைப் பொதுவில் பயன்படுத்தும் உரிமை கொண்டதாக.

**இரண்டாம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளையின், பள்ளே பத்துவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளினுள்

பிராமணகமவில் அமைந்துள்ள அந்தரகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. டி. பிரேமரத்னவால் தயாரிக்கப்பட்ட 1995, பெப்புருவரி 21 ஆந்திகதிய 1254A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு A1 இன் எல்லைகள் - வடக்கு : ரொட்றிகோவும் ஏனையோரும் உரிமைகோரும் காணி, எச். ஏ. எம். பண்டாரவும் ஏனையோரும் உரிமைகோரும் வரைபடம் இல. 604 இல் துண்டு 4 மற்றும் வரைபடம் இல. 4600 இல் துண்டு 5B ; கிழக்கு: வீதி 20 அடி அகலம் (வரைபடம் இல. 604 இல் துண்டு 6 மற்றும் வரைபடம் இல. 4600 இல் துண்டு 5E மற்றும் 5I) மற்றும் வரைபடம் இல. 196 இல் துண்டு 5L ; தெற்கு : வரைபடம் இல. 196 இல் துண்டு 5L, வீதி 20 அடி அகலம் மற்றும் டி. எஸ். ஹெட்டியாரச்சி உரிமைகோரும் துண்டு 10 இன் எஞ்சிய பங்கு ; மேற்கு : டி. எஸ். ஹெட்டியாரச்சி உரிமைகோரும் துண்டு 10 இன் எஞ்சிய பங்கு, ரொட்றிகோவும் ஏனையோரும் உரமைகோரும் காணி மற்றும் எச். ஏ.எம். பண்டாரவும் ஏனையோரும் உரிமைகோரும். வரைபடம்இல. 604 இல் துண்டு 4. சொல்லப்பட்ட 1254A ஆம் இலக்க வரைபடத்தின்படி இது இரண்டு றூட் இருபத்தாறு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 26.60பே.) விஸ்தீரணம் கொண்டது.

மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 1254 A இல் மேலே விபரிக்கப்பட்ட துண்டு A1 பின்வரும் காணிப்பங்கீடுகளின் மீள் அளவீடும் ஒன்றிணைப்புமாகும்:-

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளேயின், பள்ளே பத்துவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளிலும் பிராமணகமவில் அமைந்துள்ள அந்தரகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி.ஏ. எஸ். ஏ. குணசேகரவால் தயாரிக்கப்பட்ட 1994, பெப்புருவரி 20 ஆந் திகதிய 196 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5F, 5G, 5M, 5H, 5J, 5K மற்றும் 10A எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிபங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட 196 ஆம் இலக்க வரைபடத்தின்படி முறையே பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12.5பே.) அல்லது (0.0316 ஹெக்டயர்), பதினேழு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.5பே.) அல்லது (0.0443 ஹெக்டயர்), ஒன்று தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.8பே.) அல்லது (0.0046 ஹெக்டயர்), பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) அல்லது (0.0341 ஹெக்டயர்), பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) அல்லது (0.0341 ஹெக்டயர்), பன்னிரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12பே.) அல்லது (0.0304 ஹெக்டயர்), பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) அல்லது (0.0341 ஹெக்டயர்) விஸ்தீரணம் கொண்ட இது. ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 894/241, G894/242, G 894/243, G 894/264, G 894/265, G 894/266 மற்றும் G 894/267 ஆம் உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றின் மேலாகவும் கீழாகவும் ஊடாகவும் வழி உரிமையும் ஏனைய பயன்பாடுகளும் கொண்டதாக:-

1. மேலே சொல்லப்பட்ட 196 ஆம்இலக்க வரைபடத்தில் துண்டு 5I (ஒரு வீதிக்கான ஒதுக்கம் 9 1/2 அடி அகலம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட 196 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்தொன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 19பே.) அல்லது (0.0480 ஹெக்டயர்) விஸ்தீரணம் கொண்ட இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 894/220 ஆம் இலக்க உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. டபிள்யூ. அபேசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1993.12.12 ஆந் திகதிய 4600 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5E (ஒரு வீதிக்கான ஒதுக்கம் 9 1/2 அடி அகலம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட 4600 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஐந்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 5.5பே.) விஸ்தீரணம் கொண்ட இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 894/216 ஆம் இலக்க உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எச். பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1993, மாச்சு 9 ஆம் மற்றும் 26 ஆந் திகதிய 604 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6 (ஒரு வீதிக்கான ஒதுக்கம் 10 1/2 அடி அகலம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட 604 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தைந்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25.5பே.) விஸ்தீரணம் கொண்ட இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 927/112 ஆம் இலக்க உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மூன்றாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின், பள்ளே பத்துவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளினுள் பிராமணகமவில் அமைந்துள்ள அந்தரகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. டபிள்யூ. அபேசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1993, திசெம்பர் 12 ஆந் திகதிய 4600 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5B எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிபங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 5B இன் எல்லைகள் - வடக்கு : டி. டபிள்யூ. அபேசிங்கவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 4355 இல் துண்டு 5A ; கிழக்கு : துண்டு 5E ; தெற்கு: துண்டு 5C ; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எச். பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1993, மார்ச் 9 ஆந் திகதிய வரைபடம் இல. 604 இல் துண்டுகள் 2, 3 மற்றும் 4 சொல்லப்பட்ட 4600 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணம் கொண்ட இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 894/291 ஆம் உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றின் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக:-

வரைபடம் இல. 4600 இல் துண்டு 5E (வீதிக்கான ஒதுக்கம்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எச். பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1993, மாச்சு 9 ஆந் திகதிய வரைபடம் இல. 604 இல் துண்டு 6 (வீதிக்கான ஒதுக்கம் 10.5 அடி அகலம்).

### நான்காம் அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின், பள்ளே பத்துவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளினுள் மாபுல்கொடையில் அமைந்துள்ள தவட்டகஹவத்த அல்லது அந்தரகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1990, ஏப்பிறல் 9 ஆந் திகதிய 4571 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 2 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 1 ; கிழக்கு : சைமன் பெரேராவினதும் ஏனையோரினதும் காணி ; தெற்கு: துண்டு 3 ; மேற்கு : துண்டு 7 எனக் குறிக்கப்பட்ட 12 அடி அகலமான வீதி. சொல்லப்பட்டட 4571 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11பே.)

விஸ்தீரணம் கொண்ட இது. ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 815/22 ஆம் உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேலே சொல்லப்பட்ட மாபுல்கொடையில் அமைந்துள்ள தவட்டகஹவத்த அல்லது அந்தரகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1990, ஏப்பிறல் 9 ஆந் திகதிய 4571 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 3 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 2 ; கிழக்கு: சைமன் பெரேராவினதும் ஏனையோரினதும் காணி ; தெற்கு: மார்டின் பெரேராவின் காணி ; மேற்கு : துண்டு 4 மற்றும் துண்டு 7 எனக் குறிக்கப்பட்ட 12 அடி அகலமான வீதி ஒதுக்கம். சொல்லப்பட்ட 4571 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணம் கொண்ட இது. ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 815/21 ஆம் உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்

6-620/2

---

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0730-01486832-001 (மட்டக்களப்பு கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2009.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"W/A 32565 என்ற பதிவிலக்கம் கொண்டதாக 'தியாகராஜா அன்ட் கம்பனி' என்ற பெயர் மகுடத்தினதும் நிறுவனத்தினதும் கீழ் கூட்டாண்மை வியாபாரம் நடத்துகின்ற கொழும்பு 13 ஐச்சேர்ந்த கந்தையா தியாகராஜா மற்றும் தியாகராஜா விநாயகமூர்த்தி "கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு சந்திரகி சிவதாசன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, செத்தெம்பர் 19 ஆந் தேதிய 301 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவனை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, மே 21 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது பதின்மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து எண்ணூற்று முப்பத்தொரு ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூ. 13,93,831.58) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 13,93,831.58 பணத்தொகையையும் 2009, மே 22 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 301 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. பீ. முத்துக்குமாரண என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது"

**அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தினுள்ளும், மாநகர சபை எல்லைகளினுள்ளும் வட்டாரம், இல. 19, கொச்சிக்கடை தெற்கில் உம்பிச்சி பிளேசில் அமைந்துள்ளதும் இல. 3-1/5, உம்பிச்சி பிளேஸ் என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதனால் தயாரிக்கப்பட்ட 1973, ஒற்றோபர் 18 ஆந் திகதிய 1520A ஆம் இலக்க கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட "முத்தையாப்பிள்ளை தொடர்மாடி வீடுகள்" என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கூட்டாட்சி ஆதனக் கட்டடத்திலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டு துண்டு 6A எனக் குறிக்கப்பட்டதுமான ஓரறை கொண்ட வதிவிட வளவு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 6A இன் எல்லைகள் - வடக்கு : துண்டு : A ; கிழக்கு : துண்டு 7A இன் அரைச் சுவர் ; தெற்கு : துண்டு B ; மேற்கு துண்டு 5A இன் அரைச் சுவர், முகட்டெல்லை : கூரை : தள எல்லை ; துண்டு 6 இன் அரைக் கொங்கிரீட் கூரை. சொல்லப்பட்ட 1520A ஆம் இலக்க வரைபடத்தின்படி நாநூற்று எண்பது சதுர அடி (480 சதுர அடி) தளப்பரப்புடன் நேரடியான அணுகலுக்கான பொதுப் பரப்பாகத் துண்டுகள் A மற்றும் B ஐக் கொண்டுள்ள இது கொழும்பு காணிப் பதிவகத்தில் கூட்டாட்சி ஆதனம் A 16/176 இன் கீழ் பதிவு செய்ப்பட்டுள்ளது.

2. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரத்தால் தயாரிக்கப்பட்ட 1972, சனவரி 20 ஆந் திகதிய 730 ஆம் இலகக் வரைபடத்தில் துண்டு 20 எனக் குறிக்கப்பட்டதன் ஊடாகவும் மேலாகவும் வழி உரிமையும் (பிரசித்த நொத்தாரிசு கே. பூபாலசிங்கத்தால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1975, சனவரி 8 ஆந் திகதிய 498 ஆம் இலக்க உறுதிக்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்ட) அதனுடன் தொடர்புடைய பொது ஆக்கக்கூறுகளினதும் பொது பயன்பாடுகளினதும் 480/352 75 ஆவது பங்கும் அல்லது 1.36 வீதமும் கொண்டதாக.

**பொது ஆக்கக்கூறுகள் :**

(i) (அ) கட்டடம் அமைந்துள்ள காணி ;
(ஆ) காணியின் எஞ்சிய பங்கு, அதாவது துண்டுகள் 12, 32, 34 மற்றும் 54.
(ii) கட்டடங்களின் அத்திவாரங்கள், தூண்கள், இரும்புத் தூலங்கள்,உத்தரங்கள் ஆதாரநிலைகள், பிரதான சுவர்கள் மற்றும் கூரைகள் ;
(vii) நுழைவாயில்கள் மற்றும் வெளிச்செல்லும் வழிகள்
(viii) மின்சாரம், வடிகாலமைப்பு மற்றும் குப்பை அகற்றலுக்கான வினைமுறை அமைப்புகள்
(ix) தாங்கிகள், பம்பிகள் மற்றும் மோட்டார்கள்

(x) துண்டுகள் A மற்றும் B - பால்கனிகள், துண்டு 1A-WC மற்றும் குளியல், துண்டுகள் 3 மற்றும் 3A - துண்டுகள் 4A முதல் 10A வரையுள்ள குடியிருப்பாளர்களுக்குப் பொதுவான படிக்கட்டுகள்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்

6-620/3

---

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0730-00780410-101 (மட்டக்களப்பு கிளை)

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2006.08.08 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 832 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் குறுதுகஹ மடகே ஜயசுந்தர அல்லது கருணாரத்ன முதலிகே குமார ஜயசுந்தர என்பவர் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது மேற்படி முறியின் மீது மூன்று இலட்சத்து எண்பதாயிரத்து எழுநூற்று எழுபத்திரண்டு ரூபா எண்பத்துமூன்று சதம் (ரூ. 3,80,772.83) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.10.02 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கு 16.75% படி மூன்று இலட்சத்து எண்பதாயிரத்து எழுநூற்று எழுபத்திரண்டு ரூபா எண்பத்துமூன்று சதம் (ரூ. 3,80,772.83) பணம் ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச்சட்டதின் (29L) 29எல் என்னும் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து மூன்று இலட்சத்து எண்பதாயிரத்து எழுநூற்று எழுபத்திரண்டு ரூபா எண்பத்துமூன்று சதம் (ரூ. 3,80,772.83) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 832 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே மீகோட கிராமத்தில் அமைந்திருக்கும் பெலவத்த என்ற காணி அளந்து வேறாக்கிய இலக்கம் 05 மற்றும் 06 ஒன்றாக்கப்பட்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எல். எஸ். தஹநாயக்க என்பவரால் 2006.07.26 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 1255 என்ற வரைபடத்தின் பிரகாரம் துண்டு இலக்கம் A என்ற துண்டுக்கான எல்லைகள் - வடக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 04 உம் ; கிழக்கிற்கு: இக்காணியின் இலக்கம் 08 உம் ; தெற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 08 உம் ; மேற்கிற்கு : கிராமத்தில் இருந்து மீகொட வரை செல்லும் வீதியும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந் திருக்கும் பதிநான்கு தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.9பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி கீழே குறிப்பிடும் காணிகளுடன் ஒன்றிணைக்கப்பட்டு இணைந்துள்ள காணி என்ற படியால் முறையான மாற்றுப் பதிவுகளின் மூலம் ஒன்றிணைப்பது நல்லதாகும் :-

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே மீகோட கிராமத்தில் அமைந்திருக்கும் பெலவத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டீ. அபவத்த 1967.06.19 ஆந் திகதிகளில் கடைசியாக அளந்து தயாரித்த இலக்கம் 932A என்ற வரைபடத்தின் பிரகாரம் துண்டு 05 என்ற துண்டுக்கான எல்லைகள் - வடக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 04 உம் ; கிழக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 08 உம் ; தெற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 06 உம் ; மேற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 14 வீதியும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் இரண்டு றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 4பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக் கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் D 586/ 169 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே மீகோட கிராமத்தில் அமைந்திருக்கும் பெலவத்த என்ற காணிக்கு அதிகாரம்

பெற்ற நிலஅளவையாளர் டீ. அபவத்த என்பவரால் 1967.06.19 ஆந் திகதி கடைசியாக அளந்து தயாரித்த இலக்கம் 932A என்ற வரைபடத்தின் பிரகாரம் துண்டு 06 என்ற துண்டுக்கான எல்லைகள்- வடக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 05 உம் ; கிழக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 08 உம் ; தெற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 08 உம் ; மேற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 14 அல்லது வீதியும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் இரண்டு றூட் பத்து தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 10.9பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள், உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் D 511/181 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 22,
கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

6-573

---

**மக்கள் வங்கி - ஜா-எல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.02.26 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 08.12.2008 ஆந் திகதி கொண்ட 14139 ஆம் இலக்கம் கொண்ட முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் ஜயவீர ஆரச்சிகே அனுர சமன் ரணசிங்க என்பவர் தவணை தவறியுள்ளமையாலும், குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 19,50,863.92) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 19,50,863.92) பணத்தொகைக்காக 20.03.2009 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 24% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 19,50,863.92) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான சொக்மன் மற்றும் சமரவிக்ரம என்பவர்களினால் குறிப்பிட்ட இலக்கம் 14139 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை மெத பத்துவ கம்பஹா பிரதேச சபை (கலஹிட்டியாவ அலகு) எல்லைக்கு உட்பட்ட கனேமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கெலகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். டீ. சந்திரதிலக்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 17.09.2007 ஆந் திகதி கொண்ட இலக்கம் 5858 எனும் வரைபடத்தில் காணப்படும் 01 ஆம் இலக்கக் காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : ஈ. ஏ. பிரேமாவதி மற்றும் கே. ஏ. ஆர். ஏ. பெரேரா என்பவர்களின் காணியும்; கிழக்கில் : கே. ஏ. ஆர். ஏ. பெரேரா என்பவரின் காணி மற்றும் பாதையும் ; தெற்கில் : ஈ. ஏ. ஜயசிங்க என்பவரின் காணியும்; மற்றும் மேற்கில் : ஏ. மேரிநோனா என்பவரின் காணியும் எல்லைகளாக அமைந்த பதின்நான்கு தசம் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.8பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், சகலதுமாகும். இந்தக் காணி கம்பஹா காணிப் பதிவகத்தில் இலக்கம் E 346/236 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

6-574

---

**மக்கள் வங்கி - லிபர்ட்டி பிளாஸா கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஈ என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஈ என்னும் பிரிவின்கீழ் 2009.10.30 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"அனோமா சமந்தி கொலொன்கொட வி/மு குணசேகர மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மிரிஸ்ஸகே நந்தனி பெரேரா அத்தாட்சிப்படுத்திய 21.02.2007 ஆந் திகதி கொண்ட 3985 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான

கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி 3985 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது ஒரு கோடியே ஏழு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 1,07,25,000) பணத்தொகையொன்று மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஒரு கோடியே ஏழு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 1,07,25,000) பணத்தொகையொன்றையும் ஒரு கோடியே ஏழு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 1,07,25,000) பணத்தொகையொன்றின் மீது 28.03.2009 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 22 சதவீதப்படி மேலும் வட்டியையும் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக மேற்படி 21.02.2007 ஆந் திகதி கொண்ட 3985 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் "ரி அன்ட் எச். ஆக்ஷனியர்ஸால்" பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொள்ளுப்பிட்டி 37 ஆம் இலக்க வட்டாரத்தில் கொள்ளுப்பிட்டியவில் அமைந்துள்ளதும் பாம் குரோவ் அவென்யூ தற்பொழுது 25 ஆம் இலக்க வரிமதிப் பீட்டிலக்கம் கொண்டதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எவ். சமீர் தயாரித்த 1996, ஏப்பிறல் 06 ஆந் திகதி கொண்ட 3806 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டுகள் 1A மற்றும் 1B என்பவற்றின் ஒன்றிணைப்பின் மறு நிலஅளவையும் உட்பிரிவுமாகிய) காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். எம். ஆர். பிரேமரத்ன தயாரித்த 1998, மே 14 ஆந் திகதி கொண்ட 423 ஆம்இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு "B" என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களையும் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு "B" என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : பாம் குரோவ் ; கிழக்கில் : பாம் குரோவ் 21 ஆம் வரிமதிப்பீட்டிலக்கமும் கேர்ணல் ரி. ஜீ. ஜயவர்தன மாவத்தை 30/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கமும் கொண்ட வளவுகள் ; தெற்கில் : ஆர். ஏ. டீ. மெல் மாவத்தை, 265/4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகள் ; மேற்கில் : இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பதினாலு தசம் மூன்று ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.35பே.). இது கொழும்பு காணிப் பதிவகத்தில் A 935/274 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
(கொழும்பு தெற்கு).

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

6-579

---

### மக்கள் வங்கி - பாணந்துறை கிளை

**1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்**

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009.09.25 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

திரு. ஹேவா பொன்சேகாகே சந்தன பிரியந்த பொன்சேகா

"மக்கள் வங்கியின் சார்பில் களுத்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி. ரோஸ் குமாரி என். பெர்னாண்டோ அத்தாட்சிப் படுத்திய 23.08.2007 ஆந் திகதி கொண்ட 1680 ஆம் இலக்க ஈட்டு முறியினால் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று ஒன்பது ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 12,37,309.49) இப்பொழுது மேற்படி முறியின் மீது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று ஒன்பது ரூபா நாற்பத்தொன்பது சதத்தையும் (ரூ. 12,37,309.49), பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று ஒன்பது ரூபா நாற்பத்தொன்பது சதத்தின் மீது (ரூ. 12,37,309.49) 13.12.2007 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 20 சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப் படற்பாலதான பணங்களையும், அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக மேற்படி 1680 ஆம் இலக்க ஈட்டு முறியினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. சமன்மலி ரமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் (29டி) என்னும் பிரிவின் கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன பாணந்துறை தல்பிட்டி தேபெத்த பாணந்துறை நகர எல்லைக்குள் வேகட கிராமத்தில் அமைந்துள்ளதும் "கலவில ஓவிட்ட" என அழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்க தயாரித்த 23.01.1983 ஆந் திகதி கொண்ட 824ஏ ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு "1" எனக் காட்டப்படும் பாணந்துறை காணிப் பதிவகத்தில் F 549/107 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடம் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக - வடக்கில் : எம். ஜே. பெர்னாண்டோ, எம். ஜே. பெரேரா ஆகியோருக்குரிய காணி; கிழக்கில்: 2 ஆம் இலக்கத் துண்டு ; தெற்கில் : 20 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட துண்டு இல. 5 ; மேற்கு : சொலமன் மாவத்தை 40 ஆம், 40/1 ஆம் இலக்க வளவுகள் என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவும் இருபது தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.5பே.).

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன பாணந்துறை தல்பிட்டி தேபெத்த பாணந்துறை நகர எல்லைக்குள் வேகட கிராமத்தில் அமைந்துள்ளதும் "கலவில ஓவிட்ட" என அழைக் கப்படுவதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்க தயாரித்த 23.01.1983 ஆந் திகதி கொண்ட 824ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படுவதும் துண்டு "5" என அடையாளமிடப் பட்டதும் பாணந்துறை காணிப்பதிவகத்தில் F 549/108 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான காணித்துண்டு முழுவதும். பாதை ஒன்றாகப் பயன்படுத்துவதற்கான வழியுரிமையுடன் சேர்த்து இதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டுகள் 1, 2, 3 ; கிழக்கில் : 4 ஆம் இலக்கத் துண்டு ; தெற்கில் : பி. எஸ். ரொட்ரிகோ, சீ. பொன்சேகா ஆகியோருக்குரிய காணிகள்; மேற்கில் : சொலமன் மாவத்தை என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பதினேழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17பே.).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
களுத்துறை.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம், (களுத்துறை)
இல. 341, காலி வீதி,
பாணந்துறை.

6-577

---

**மக்கள் வங்கி - கொக்கல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009.11.27 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2007.09.06 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 1656 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் அம்பாவில என்டேரகே ரனஸிரி எதிரிமுனி சுரங்கி மனோரி ப்ரியதர்சனி என்பவர் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது மேற்படி முறியின் மீது மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து எண்பத்திரண்டு ரூபா (ரூபா 3,28,082.00) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2009.02.25 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு (22%) படி மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து எண்பத்திரண்டு ரூபா (ரூபா 3,28,082.00) பணம் ஏல விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) 29எல் என்னும் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து எண்பத்திரண்டு ரூபா (ரூபா 3,28,082.00) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 1656 என்ற ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தீர்மானிக் கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே ஹபராதுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கதலுவ மேற்கில் அமைந்துள்ள மாஸவெல என்ற காணிக்காக அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஸீ. எஸ். ஜயவர்தன என்பவரால் 2005, மாச்சு 03 ஆந் திகதிய அளந்து தயாரித்த இலக்கம் 2006/237 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் துண்டு இலக்கம் A1 க்கு எல்லைகள் - வடகிழக்கிற்கு : வீதியும்; தென்கிழக்கிற்கு : இலக்கம் 7994 வரைபட இலக்கம் 01 என்ற துண்டும்; தென்மேற்கிற்கு : இலக்கம் 8009 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடும் இலக்கம் 02 என்ற துண்டும் ; வடமேற்கிற்கு : பெல இனி வெடயும் இதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் எட்டு தசம் பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.0பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், மட்டைகள், உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் D 932/46 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

6-576

---

**மக்கள் வங்கி - ஜா-எல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009.07.31 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 02.07.2008 ஆந் திகதி கொண்ட 13604 ஆம் இலக்கம் கொண்ட முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் ஜோசப் சார்ல்ஸ் ரவி கார்வாலோ என்பவர் தவணை தவறியுள்ளமையாலும், குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்று இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 12,94,625.19) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு

வருமதியாகவும் வரவேண்டியுள்ளது. மேலும் பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்று இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 12,94,625.19) பணத்தொகைக்காக 05.11.2008 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 24% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களையும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்று இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 12,94,625.19) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களால் குறிப்பிட்ட இலக்கம் 13604 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) கடன் வசதி வழங்கப்பட்டுள்ள 17.01.2006 ஆந் திகதி கொண்ட 2912 ஆம் இலக்க முறியும் அவ்வாறான நிலையிலேயே நடைமுறையில் உள்ளது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம் பத்துவ ஜா-எல பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட குருந்துவத்தை கிராமத்தில் அமைந்துள்ள கனுவனவத்தை அல்லது மோராஎஸ்வத்தை அவர்களால் 04.02.2005 ஆந் திகதி அளந்துதயாரிக்கப்பட்ட இலக்கம் 3623A எனும் வரைபடத்தில் காணப்படும் 19 எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : 25 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; கிழக்கில் : 20 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தெற்கில் : 26 ஆம் இலக்கக் காணித்துண்டும் (ஆறு மீட்டர் அகலமான பாதை) ; மேற்கில் : பிரதேச சபைப் பாதையும் எல்லைகளாக அமைந்த பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் B 192/246 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் வரைபடத்தில் காணப்படும் பாதையை உபயோகிக்கும் உரிமையும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

6-581

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(வெலிமட கிளை) - நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

"நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும், நம்பிக்கலு ஆராச்சிகே டொன் சுமித் ரம்யா குணசேகர மறுபெயர் சுமித் ரம்யா குணசேகர அடகு வைத்தவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், பதுளை பிரசித்த நொத்தாரிசு எச். ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதியிடப்பட்ட 577 ஆம் இலக்க முறி, அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் அடகு ஆதனம் தொடர்பாக மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளதற்கு அமைவானதுமான முறி "நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட் வழங்கப்பட்ட கடனை மீளப் பெறுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு அடமானமாக வழங்கப்பட்டது.

அத்துடன் நம்பிக்கலு ஆராச்சிகே டொன் சுமித் ரம்யா குணசேகர மறுபெயர் சுமித் ரம்யா குணசேகர முன் சொல்லப்பட்ட நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட்டின் சாரியாம்சமான உரிமையாளர் என்பதுடன் அதனை நிர்வகிப்பவர் என்பதுடன், கிட்டத்தட்ட "நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட்டின், சகல பங்குகளையும், நம்பிக்கலு ஆராச்சிகே டொன் சுமித் ரம்யா குணசேகர மறுபெயர் சுமித் ரம்யா குணசேகர கொண்டுள்ளார் என்பதுடன் நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட்டின் இயக்குநராகவும் செயல்படுவதுடன், அதற்கு இணங்க மேற்சொல்லப்பட்ட நம்பிக்கலு ஆராச்சிகே டொன் சுமித் ரம்யா குணசேகர மறுபெயர் சுமித் ரம்யா குணசேகர, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. யினால் நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட் வழங்கக்கப்பட்ட நிதிக் கடன் கொடுப்பனவின் மூலம் உண்மையிலேயே பயன் அடைபவர்.

அத்துடன் நந்தன பேக்கர்ஸ் அன்ட் ரெஸ்ரோரன்ற் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் நம்பிக்கலு ஆராச்சிகே டொன் சுமித் ரம்யா குணசேகர மறுபெயர் சுமித் ரம்யா குணசேகர, என்பவர்கள் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபத்திற்கு வருமதியான கொடுப்பனவில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாலும், 2009, ஓகத்து 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது நாற்பத்தாறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தைந்து ரூபா ஒன்பது சதம் (ரூபா 46,57,855.09) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக

விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 577 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 46,57,855.09 பணத்தொகையை 2009, செத்தெம்பர் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம். வெலிமட பிரதேச செயலாளர் பிரிவின் தெஹிவினிபலாத்த கோறளயின் வெலிமட நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட கொட்டவெர பல்லேகமவில் உள்ள ஹேமபால முனிதாச மாவத்தையின் 104 வரிமதிப்பீட்டிலக்கத்தின் ''பட்டியாமெதவத்த'' என அழைக்கப்படும் காணியுடனான கட்டடம், மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 03.05.2000 ஆந் திகதியிடப்பட்ட 3897 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : மொனராகலை வீதியின் 2/2 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட ஆதனம் ; கிழக்கு : புகாரி ஹொட்டேலின் வளவு (எச். எம். மாவத்தையின் வரிமதிப்பீட்டிலக்கம் 100 ஐக் கொண்ட ஆதனம்) ; தெற்கு : ஹேமபால முனிதாச மாவத்தை; மேற்கு : கொழும்பு ஸ்ரோசின் ஆதனம் (எச். எம். மாவத்தையின் வரிமதிப்பீட்டிலக்கம் 106 ஐக் கொண்ட ஆதனம்) அத்துடன் சொல்லப்பட்ட உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 03.05.2000 ஆந் திகதியிடப்படட் 3897 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், பதுளை மாவட்ட காணிப் பதிவகத்தில் சி 520/259 இல் பதிவு செய்யப்பட்ட மூன்று தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 3.14பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

6-587/1

---

**மக்கள் வங்கி - ஜா-எல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009.10.30 ஆந் திகதீ மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்திய 29.09.2008 ஆந் திகதி கொண்ட 13968 ஆம் இலக்கம் கொண்ட முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் வர்ணகுலசூரிய ஜுட் பிரசாத் கொஸ்தா என்பவர் தவணை தவறியுள்ளமையாலும், குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து தொளாயிரத்து பன்னிரண்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 39,45,912.86) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் வரவேண்டியுள்ளது. மேலும் முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து தொளாயிரத்து பன்னிரண்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 39,45,912.86) பணத்தொகைக்காக 14.04.2009 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 24% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களையும், கட்டணங்களையும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து தொளாயிரத்து பன்னிரண்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 39,45,912.86) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான மட்டுப்படுத்தப்பட்ட டல்லஸ் மற்றும் கெலார்ட்ஸ் தனியார் நிறுவனத்தினால் குறிப்பிட்ட இலக்கம் 13968 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம் பத்துவ ஏக்கல எனும் இடத்தில் அமைந்துள்ள கால்ல எஸ்டேட் எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. எட்வர்ட் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 21.10.2006 ஆந் திகதி கொண்ட இலக்கம் 4173 எனும் வரைபடத்தில் காணப்படும் 35 ஆம் இலக்கக் காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கில் : 49 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டம் ; கிழக்கில் : 36 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டும் ; தெற்கில் : 44 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டும் மற்றும் ; மேற்கில் : 48 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் B 217/126 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட வரைபடத்தில் காணப்படும் பாதை ஒதுக்கீடும் உள்ளடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 13,
கண்டி வீதி,
பெலும்மஹர.

6-580

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தெல்கொட கிளை) - மல்மால ஆராச்சிகே பிரேமசிரி

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''மல்மால ஆராச்சிகே பிரேமசிரி கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருணாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, யூலை 20 ஆந் திகதியிடப்பட்ட 25133 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, ஓகத்து 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐநூற்று முப்பத்தொரு ரூபா எண்பத்து நான்கு (ரூ. 8,58,531.84) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 25133 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 8,58,531.84 பணத்தொகையை 2009, செத்தெம்பர் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எச். தலுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன்ன கோறளவின் அத்திக்காரி பற்றுவின் பியகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கோணாவல கிராமத்தில் உள்ள கெக்குணகஹாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்ஹவினால் தயாரிக்கப்பட்ட 08.09.2006 ஆந் திகதியிடப்பட்ட 999/2006 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 'பி1' என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: ஜயசேனவின் காணி ; கிழக்கு : என். ஜோசப் பெனடிக்கின் காணி ; தெற்கு : காணித்துண்டு டி ; மேற்கு : காணித்துண்டு ஏ (வீதி ஒதுக்கீடு 10 அடி அகலமானது) அத்துடன் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7பே.) அல்லது 0.017 ஹெக்டயர்கள் விஸ்தீரணடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

அத்துடன் சொல்லப்பட்ட 999/2006 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்தண்டு சி1 என அடையாளம் இடப்பட்டதற்கு அமைய வீதியை உபயோகிப்பதற்கான உரிமையுடன் சேர்த்து.

சொல்லப்பட்ட காணித்துண்டு 'பி1' மீள நிலஅளவை செய்யப்பட்ட பின்வரும் காணி -

முன் சொல்லப்பட்ட கோணாவல கிராமத்தில் உள்ள கெக்குணகஹாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்ஹவினால் தயாரிக்கப்பட்ட 18.09.1995 ஆந் திகதியிடப்பட்ட 663/1995 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு பி என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : சந்திராவதி ஹெற்றியாராச்சியின் காணி ; கிழக்கு : ஜோசப் பெனடிக்கின் காணி ; தெற்கு : காணித்துண்டு டி ; மேற்கு : காணித்துண்டுகள் ஏ. சி. மற்றும் டி மற்றும் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம். அத்துடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் தொகுதி பக்கம் சி 557/242 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

6-587/2

---

## மக்கள் வங்கி - ஊரகஸ்மங்ஹந்திய கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.01.22 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''காலி பிரசித்த நொத்தாரிசு அஜந்தா கபுகமகே என்பவரால் 2007.10.17 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 1716 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் இலன்தாரி தேவ ஸமன்த குமார, இலன்தாரி தேவ நந்தனி சிரியாலதா அல்லது நந்தனி சிரியலதா ரஸேந்திர என்பவர்கள் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது மேற்படி முறியின் மீது பதினொரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா (ரூ. 11,20,000.00) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.10.01 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கு 23% படி பதினொரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா (ரூ. 11,20,000.00) பணம் ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச்சட்டததின் (29L) 29எல் என்னும் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து பதினொரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா (ரூ. 11,20,000.00) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 1716 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட

ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டு மென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், கரன்தெனிய பிரதேச வருமான அதிகாரப் பிரிவிலே வெல்லபட பத்துவே மாகல தெற்கு கிராம சேவகர் பிரிவிலே மாகல தெற்கு என்ற காணியில் அமைந்தள்ள கெகிரிஸ் கந்த என்ற காணி பிரதான பத்திர இலக்கம் கா/ப்ரா 6659/எல்எல்/23324 என்ற சர்வே ஜனராலால் தயாரித்து அவர் பொறுப்பில் இருக்கும் பீ. பீ. ஏ 1406 என்ற வரைபட இலக்கம் 186 என்ற நிலத்துண்டுக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. ரன்ஜித் ஆனந்த என்பவரால் 2007.07.15 ஆந் திகதி மீண்டும் அளந்து தயாரித்த இலக்கம் 1709 என்ற வரைபடத்தின் பிரகாரம் அதன் இலக்கம் 186 என்ற துண்டுக்கு எல்லைகள் - வடக்குக்கு : இக்காணி இலக்கம் 183 மற்றும் 185 என்ற துண்டுகளும் ; கிழக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 185 மற்றும் 190 என்ற துண்டுகளும் ; தெற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 187 மற்றும் 190 என்ற துண்டுகளும் ; மேற்கிற்கு : இக்காணி யின் இலக்கம் 182, 183 மற்றும் 187 என்ற துண்டுகளும். இதன் எல்லை களாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள் மரம், மட்டைகள், உட்பட மற்றும் அனைத்தும்.

இக்காணி பலபிட்டிய மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் LDO A3/172 கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 22,
கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

6-582

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(வென்னப்புவ கிளை) - வர்ணகுலசூரிய அஜித் பர்ணாண்டோ

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"வர்ணகுலசூரிய அஜித் பர்ணாண்டோ கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் வென்னப்புவ பிரசித்த நொத்தாரிசு எச். ஜே. டி. பொன்சேகாவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2005, மாச்சு 28 ஆந் திகதியிடப்பட்ட 26299 ஆம் இலக்க முறி மற்றும் 2007, செத்தெம்பர் 11 ஆந் திகதியிட்ட 31329 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது பத்து இலட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்று எண்பது ரூபா எண்பத் தொன்பது சதம் (ரூ. 10,90,880.89) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 26299 மற்றும் 31329 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 10,90,880.89 பணத்தொகையை 2010, சனவரி 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் மாரவில பதிவுப் பிரிவிற்கு உட்பட்ட பிற்றிகல் கோரள தெற்கின் கமால் பற்றுவின் தும்மலதெனிய மேற்கில் உள்ள தெமினகஹாவத்தவின் காணித்துண்டு 1ஏ2 என அழைக்கப்படும் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வை. எம். ராஜித் யாப்பாவினால் தயாரிக்கப்பட்ட 09.11.2004 ஆந் திகதியிடப்பட்ட 9058பி ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1ஏ2 இன் எல்லைகள் - வடக்கு : ரி. டி. கரோலிஸ் பீரிசின் வாரிசுகளின் காணி மற்றும் லால் பர்ணாண்டோவின் காணி; கிழக்கு : 9058 ஏ இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 ; தெற்கு : 9058 ஏ இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1பி ; மேற்கு : காணித்துண்டு 1ஏ3 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) மற்றும் சொல்லப்பட்ட 9058 பி இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1ஏ1, அத்துடன் இருபத்து நான்கு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 9058பி இற்கு அமைவானதும், மாரவில காணிப்பதிவகத்தில் ஜி 114/123 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபத்து நான்கு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 24.75பே.) விஸ்தீரணமான ஆதனத்துடனான எல்லாம். சொல்லப்பட்ட 9058பி இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 1ஏ3; காணித்துண்டு 1சி மற்றும் காணித்துண்டு 3 என்பன மீதான பாதை உரிமைகளுடனான ஆதனம், மாரவில காணிப் பதிவகத்தில் ஜி 114/123 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

6-587/3

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அநுராதபுரம் கிளை) - டொன் சிமன் பட்டபெந்திகே மாசி டீ சில்வா

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

''டொன் சிமன் பட்டபெந்திகே மாசி டீ சில்வா கடப்பாடுடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, பெப்புருவரி 28 ஆந் திகதியிடப்பட்ட 4149 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும் 2009, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து ஐநூற்று எழுபத்தாறு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூபா 1,53,576.52) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்டதுமான 4149 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,53,576.52 பணத்தொகையை 2009, நவெம்பர் 31 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கனதர கோறளவின் தம்மனவ கிராமத்தில் (F.V. P. 246) தற்போது, வன்னிதம்மன்னவ என அழைக்கப்படும் ஆதனம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. கே. சின்னையாவினால் தயாரிக்கப்பட்ட 01.10.2004 ஆந் திகதியிடப்பட்ட 292 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணிதுண்டு 2 (06.08.1998 ஆந் திகதியிடப்பட்ட Anu/ Nenupa/ Pra/4272 LDO இன் பிரிவு 19 இன் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவில் விபரிக்கப்பட்டுள்ள காணியின் உப பிரிவாகும்) என அடையாளம் இடப்பட்ட தம்மனவ என அழைக்கப்படும் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : 292 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 ; கிழக்கு : வீதி (வீ. அ. அ. ச. ) ; தெற்கு : டி. எஸ். பீ. நீலமணி டீ சில்வாவின் காணி ; மேற்கு : டி. எஸ். பீ. சரத்தின் காணி. அத்துடன் அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் LDO 594/84 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹெக்டயர் பூஜ்யம் தசம் பூஜ்யம் ஏழு பூஜ்யம் எட்டு (ஹெக்டயர் 0.0708) அல்லது இருபத்து எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 28பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

6-587/4

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நித்தம்புவ கிளை) - லொக்கு எதிரிசிங்க ஆராச்சிலாகே ரோஹன எதிரிசிங்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''லொக்கு எதிரிசிங்க ஆராச்சிலாகே ரோஹன எதிரிசிங்க கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்காவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, பெப்புருவரி 12 ஆந் திகதியிடப்பட்ட 5935 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐந்து இலட்சத்து எழுபத்துமூவாயிரத்து ஐநூற்று எண்பத்தொரு ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூ. 5,73,581.34) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 5935 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 5,73,581.34 பணத்தொகையை 2010, மாச்சு 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன் கோறளவின் மெத பற்றுவின் அத்தனகல பிரதேச சபையின் பெமுல்ல உப காரியாலய

எல்லைக்கு உட்பட்ட திரிவனேகமவில் உள்ள 'தெல்கஹாவத்த'' என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. யூ. சேனரத்தினால் தயாரிக்கப்பட்ட 17.03.2000 ஆந் திகதியிடப்பட்ட 944 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : வீதி மற்றும் ஏ. லிசிநோனாவினால் உரிமை கோரப்படும் காணி ; கிழக்கில் : ஏ. லிசிநோனாவினால் உரிமை கோரப்படும் காணி ; தெற்கில் : ஏ. லிசிநோனாவினால் உரிமை கோரப்படும் காணி மற்றும் காணித் துண்டு 2 ; மேற்கில் : காணித்துண்டு 2 மற்றும் வீதி. அத்துடன் சொல்லப் பட்ட வரைபட இலக்கம் 944 இற்கு அமைவானதும் கம்பஹா மாவட்ட காணிப்பதிவகத்தில் ஈ 660/103 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப் பட்ட இருபது தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.20பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

6-587/5

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2010.03.18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததா வது -

''பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ. சீ. பீ. திலகரத்ன அத்தாட்சிப்படுத்திய 2003.09.08 ஆந் திகதியிட்ட முறி இல. 2199 பிரசித்த நொத்தாரிசு பீ. பீ. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2006.08.14 ஆந் திகதியிட்ட முறி இல. 5061 ஆகியவற்றின் பேரில் இல. 1023/A, கண்டி ரோட், களனிய என்னும் முகவரியைச் சேர்ந்த குட்வில் மோட்டர்ஸின் பங்குதாரர் களனிய நுன்கமுகொட, சென். ஜோசப் வத்த, இல. 435/10/A என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. எஹல்பிட்டிய ஹேவகே கிரிஷாந்த ரணசிங்ஹ மற்றும் திருமதி தெலிகட பல்லகே இந்திராணி ஆகியோரிடமிருந்து கடன் மற்றும் மேலதிகப் பற்று கணக்குகளுக்கான முதலும் 2010.02.15 வரை வட்டியும் எழுபத்தொரு இலட்சத்து எழுபத்தையாயிரத்து எழுநூற்று முப்பத்தெட்டு ரூபா எண்பத்தொன்பது சதங்களும் (ரூ. 71,75,738.89) அத்துடன் கடன் கணக்குக்காக பதினான்கு இலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்று பதினான்கு ரூபா இருபத்தைந்து சதங்கள் (ரூ. 14,10,714.25), மீது ஆண்டுக்கு இருபத்தெட்டு (28%) வீதத்திலும் அங்கீகரிக்கப்பட்ட எல்லை நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 40,00,000) வரை ஆண்டுக்கு இருபத்தொன்பது (29%) வீதத்திலும் (நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிய தொகை பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்தேழு ரூபா எண்பது சதங்கள் (ரூ. 14,96,827.80) உள்ளடக்கப்படவில்லை. வட்டியும் 2010.02.16 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

மேற்குறிப்பிட்ட முறி இல. 2199 மற்றும் 5061 ஆகியவற்றின் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட எழுபத்தொரு இலட்சத்து எழுபத்தையாயிரத்து எழுநூற்று முப்பத்தெட்டு ரூபா எண்பத்தொன்பது சதங்களும் (ரூ. 71,75,738.89) நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிய தொகை பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்தேழு ரூபா எண்பது சதங்கள் (ரூ. 14,96,827.80) உள்ளடக்கப்படவில்லை) அத்துடன் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்தகருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக் கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பேலியகொடை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது.''

### அட்டவணை

***விற்பனைக்குரிய ஆதனம்:***

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரி பற்றுவில் களனிய பிரதேச சபை எல்லைகளுள் (களணிய உப அலுவலகம்) தளுகமவில் ஹிம்புட்டுவெலகொடயில் அமைந்த கண்டி ரோட், வரிமதிப்பிலக்கம் 1021/A யைக் கொண்ட கஹட்டகஹவத்தை யின் துண்டு C என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்ஹ தயாரித்த 18.08.1991 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 514/1991 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு வடக்கில்: கண்டி ரோட், நன்ததேவ வரிமதிப்பீட்டிலக்கம் A/1019 (பாகம்) ஐக் கொண்ட நிலமனையும் ; கிழக்கில் : கண்டி ரோட் வரிமதிப்பீட்டிலக்கம் 1021 (பாகம்) ஐக் கொண்ட சிறிசேன கெதிகமவின் அதே காணியின் பகுதியும்; தெற்கில் : கண்டி ரோட்டும் ; மேற்கில் : நந்ததேவயில் கண்டி ரோட்டு வரிமதிப்பீட்டிலக்கம் A/1019 ஐக் கொண்ட நிலமனையும் எல்லை களாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 514/1991 இன்படி மூன்று தசம் ஒன்பது சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 3.90பே.) விஸ் தீரணமுடையது. இது கொழும்பு காணிப் பதிவகத்தில் C 508/122 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எம். கே. பீ. கப்ரால்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பேலியகொடை மேற்தரக் கிளை.

6-590

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தங்கொட்டுவ கிளை) - ஹெட்டிபத்திரன்ஹெலாகே வசந்த குமார குணவர்தன

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''ஹெட்டிபத்திரன்ஹெலாகே வசந்த குமார குணவர்தன கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். எம். பெர்ணாண்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஏப்பிறல் 07 ஆந் திகதியிடப்பட்ட 810 ஆம் இலக்க முறி மற்றும் 2006, யூன் 26 ஆந் திகதியிட்ட 1587 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இரண்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து அறுநூற்று நான்கு ரூபா நாற்பது சதம் (ரூ. 2,24,604.40) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 810 மற்றும் 1587 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 2,24,604.40 பணத்தொகையை 2009, ஓகத்து 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

முன்சொல்லப்பட்ட 810 மற்றும் 1587 ஆம் இலக்க முறிகளின் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிப்பட்டதற்கு அமைய காணித்துண்டு ஏ, 8 அடி என அடையாளமிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கீடும் சேர்த்து.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பிற்றிகல் கோறளவின் கட்டுகம்பொல ஹத்பற்றுவின் கோணவில மாக்கன்துற உப அலுவலகத்திற்கு உட்பட்ட வெற்றிருப்புவவில் உள்ள கலகவெவவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். ஈ. மென்டிசினால் தயாரிக்கப்பட்ட 27.07.1987 ஆந் திகதியிடப்பட்ட 5142 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஆர். எஸ். பர்ணான்டோவினால் தயாரிக்கப்பட்ட 24.08.1936 ஆந் திகதியிடப்பட்ட 2756 ஆம்இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு ஏ. ஏ. எம். பேபி நோனா மற்றும் என். ஏ. வினிபிரட் பெரேரா ஆகியோரின் காணி; கிழக்கு : முன்னர் ஹேரத் ஹாமினியின் காணி தற்போது எம். கே. டி. நந்தசிறியினது ; தெற்கு : எட்டு அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு , ஏ. எம். பொடி நோனாவின் காணி; எச். ஜி. குணவர்தன மற்றும் ஏ. எம். பீ. குணவர்தன ஆகியோரின் காணி; மேற்கு : முன்னர் அப்புராலவினதும் தற்போது ஏ. எம். சோமசிறியினதும் காணி அத்துடன் குளியாபிட்டிய மாவட்ட காணிப் பதிவகத்தில் எஸ். 95/71 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட மூன்று றூட்ஸ் மற்றும் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 24பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

முன்சொல்லப்பட்ட 810 மற்றும் 1587 ஆம் இலக்க அடகு முறிகளின் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிப்பட்டதற்கு அமைய காணித்துண்டு ஏ, மீதான வீதி ஒதுக்கீட்டுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

6-587/6

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2010.01.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

"பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ. சீ. பீ. திலக்கரத்ன அத்தாட்சிப் படுத்திய 2007.06.27 ஆந் திகதியிட்ட முறி இல. 3180 இன் பேரில் இல. 68, சென். அன்ரனீஸ் மாவத்தை, சினமன் கார்டன், கட்டான மேற்கு கட்டான தற்போதைய முகவரி சென் அன்ரனீஸ் மாவத்தை, பெலக வத்த, கட்டான மேற்கு கட்டான என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கெந்தசிங்ஹ ஆச்சாரிகே நாலக பிரியதர்ஷன மற்றும் திருமதி மெல்லாவ தந்திரிகே தினூஷா சந்ரமாலி ஆகியோரிடமிருந்து முதலும் 2009.11.16 வரை வட்டியும் கடனுக்காக இருபத்தொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று ஐம்பத்தொன்பது ரூபா பத்தொன்பது சதங்களும் (ரூ. 21,09,759.19) அத்துடன் பதினேழு இலட்சத்து இருபத்தையாயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டு ரூபா நாற்பத்திரண்டு சதங்கள் மீது (ரூ. 17,25,248.42) ஆண்டுக்கு இருபத்தைந்து தசம் ஏழு ஐந்து (25.75%) வீதத்தில் 2009.11.17 ஆந்திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

மேற்குறிப்பிட்ட முறி இல. 3180 மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இருபத்தொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று ஐம்பத்தொன்பது ரூபா பத்தொன்பது சதங்களும் (ரூ. 21,09,759.19) அத்துடன் 2009.11.17 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி

கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமைய வும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நீர்கொழும்பு பஸார் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

**விற்பனைக்குரிய ஆதனம் :**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் கட்டான பிரதேச சபை எல்லைகளுள் (கட்டான உப அலுவலகம்) கட்டான மேற்கில் அமைந்த குருந்துகொட்டுவ (சினமன் கார்டன் என யாவரும் அறிந்த) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பாலேந்திரன் தயாரித்த 2007, மாச்சு 03 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. SB/2007/82 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு வடக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ரத்நாயக்கா தயாரித்த 1998, செத்தெம்பர் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1707A இன் துண்டு 10 உம் ; கிழக்கில் : கட்டான ரோட்டிலிருந்து துரியங்கஸ்ஹந்திய வரை சென். அன்ரனீஸ் ரோட்டும் ; தெற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ரத்நாயக்கா தயாரித்த 1998.09.18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.1707A இன் துண்டு 12 உம் ; மேற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ரதநாயக்கா தயாரித்த 1998.07.18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1707A இன் துண்டு 13 மற்றும் 14 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. SB¹/2007/82 இன் படி பதின்நான்கு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.5பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். மேற்குறிப்பிட்ட துண்டு 1 கீழே விபரித்த காணியின் மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட கட்டான மேற்கில் அமைந்த குருந்துகொட்டுவ (சினமன் கார்டன் என யாவரும் அறிந்த) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ரத்நாயக்கா தயாரித்த 1998, செத்தெம்பர் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1707A இல் விபரித்த துண்டு 11 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1707A இல் துண்டு 10 உம் ; கிழக்கில் : கட்டான கொச்சிக்கடே ரோட்டும் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1707A இல் துண்டு 12 உம் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1707A இல் துண்டுகள் 13 மற்றும் 14 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1707A இன் படி பதின்நான்கு தசம் நான்கு ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.49பே.) அல்லது 366.575 சதுர மீற்றர்கள் விஸ்தீரணமுடைய காணி ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் E 992/15 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஜீ. எச். எஸ். பெர்ணாண்டோ,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நீர்கொழும்பு பஸார் கிளை.

6-593

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்**

2010.03.18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது–

''1 பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ. சீ. பீ. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 2009.02.25 ஆந் திகதிய இலக்கம் 3439 இன் பேரில் இல. 284 5B/B2, சின்னமோலேவத்த 60 அடி ரோட் தளுவகொட்டுவ கொச்சிக்கடே என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. பிராமன சிங்ஹகே ஜகத் வசந்த பொன்சேகா என்பவரிடமிருந்து இரண்டு கடன் கணக்குகளுக்கான முதலும் 2010.01.28 ஆந் திகதி வரையிலான வட்டியும் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது ரூபா இரண்டு சதங்களும் (ரூ. 49,50,549.02) அத்துடன் 1வது கடன் ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்பது ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 6,95,879.37), (11) வது கடன் முப்பத்தாறு இலட்சத்த ஐம்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபா அறுபது சதம் (ரூ. 36,59,350.60) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2010.01.28 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

மேற்குறிப்பிட்ட முறி இல. 3439 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது ரூபா இரண்டு சதங்களும் (ரூ. 49,50,549.02) அத்துடன் 2010.01.29 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்தகருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நீர்கொழும்பு பஸார் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

**விற்பனைக்குரிய ஆதனம் :**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் பல்லன்சேன வடக்கில் அமைந்த பாடசாலை ஒழுங்கை வரிமதிப்பிலக்கம் 12/43 ஐக் கொண்ட ''ஹிக்கஹவத்த, இரிப்புவெல, ஹிக்ககும்புர, தல்கஹவத்த, சியம்பலாகஹவத்த, அல்லது கோங்கஹவத்த அல்லது நிதுல்லகஹவத்த கரந்தகஹகும்புரயின் துண்டுகள் 3 மற்றும் 4 தற்சமயம் இரிப்புவெல என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பெர்னான்டோ தயாரித்த 1995, சனவரி 5 மற்றும் 7 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 6114 A இல் விபரித்த துண்டு D என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட

குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு C உம் ; கிழக்கில் : துண்டு V (15 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்டது) ; தெற்கில் : துண்டு E உம் ; மேற்கில் : (மாநகர சபை ரோட்) சொய்சாவத்த ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6114A இன் படி பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய, காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E 630/319 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம்இல. 6114A இல் விபரித்த துண்டு G (15 அடி அகலப்பாதை) துண்டு V (15 அடி அகலப்பாதை) மற்றும் துண்டு W (12 அடி அகலப்பாதை) என அடையாளமிட்ட பாதை ஒதுக்கங்கள் மீதான வழி உரிமையும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஜீ. எச். எஸ். பெர்ணாண்டோ,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நீர்கொழும்பு பஸார் வீதி.

6-591

---

## இ. அ. நி. கூ. வங்கி

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைப் பொலன்னறுவையில் கொண்டுள்ளதும், (இதனைத்துப்பின்னர் "கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) கிறெஸ்ட் லங்கா பேனிச்சர் அன்ட் ஹன்டிகிறாப்ட் பக்றறி (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், எல்லாம் இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. அபேவர்த்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, யூலை 31 ஆந் திகதிய 123 ஆம், 2003, திசெம்பர் 01 ஆந் திகதிய 161 ஆம் மற்றும் 2008, நவெம்பர் 27 ஆந் திகதிய 1098 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது, வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், மேற்கூறப்பட்ட 123 ஆம், 161 ஆம் மற்றும் 1098 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே பதின்நான்கு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஐநூற்று நாற்பத்திண்டு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 1,14,54,542.94) கொண்ட தொகையும் 2010, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதினைந்து இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து அறுநூற்று இருபத்து மூன்று ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 15,29,623.78) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் அத்துடன் எண்பது இலட்சம் ரூபா (ரூ. 80,00,000) கொண்ட தொகை மீது மீளாய்வுத் தேதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும், ஆண்டொன்றுக்குப் ஒன்பது சதவீத (9%) விளிம்பும் அதாவது -

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சஎபிவீ) அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

மேலேயுள்ள அடிப்படைவீதங்கள் மீளாய்வுக்குட்படுவதுடன், ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும். சொல்லப்பட்ட கிறெஸ்ட் லங்கா பேனிச்சர் அன்ட் ஹன்டிகிறாப்ட் பக்றறி (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளி னால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 123 ஆம், 161 ஆம் மற்றும் 1098 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒரு கோடியே பதின்நான்கு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஐநூற்று நாற்பத்திண்டு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 1,14,54,542.94) கொண்ட தொகையும் 2010, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதினைந்து இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து அறுநூற்று இருபத்து மூன்று ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 15,29,623.78) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியையும் அத்துடன் எண்பது இலட்சம் ரூபா (ரூ. 80,00,000) கொண்ட தொகை மீது மீளாய்வுத் தேதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை

வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும், ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீத (9%) விளிம்பும் அதாவது -

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சஎபிவீ) அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

மேலேயுள்ள அடிப்படைவீதங்கள் மீளாய்வுக்குட்படுவதுடன், ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 123 ஆம், 161 ஆம் மற்றும் 1098 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் கம்பனியினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 123 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டிக் கோளையின் பள்ளே பத்துவில் மொறட்டுவை நகர சபை எல்லைகளினுள் இடம பிரிவில் எம். ஜே. சீ. பர்ணாந்து மாவத்தையில் 86ஏ ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், "கொட்டுவேவத்த" எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டீ.ஜீ. எம். பீட்டர் பர்னாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1983.12.06 ஆந் திகதி 1412 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. ஈ1 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : 514 ஆம் இலக்க வரைபடத்தில் "டீ" க்காகப் பிரிக்கப்பட்ட காணிப்பாகம்; கிழக்கில் : திருமதி எச். ஜே. பீரிஸ் நோனாவினால் உரிமைகோரப்பட்டதும், கலியதந்தே கும்புர எனவழைக்கப்படுவதுமான நெற்காணி; தெற்கில் : 104 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. ஈ2 என அடையாளமிடப்பட்டதும், வோல்ட்டர் பீரிஸினால் தற்போது உரிமைகோரப்பட்டதுமான காணி மற்றும் ; மேற்கில் : தற்போது எம். ஜே. சீ. பர்ணாந்து மாவத்தையாகவுள்ள சுற்றுவட்ட வீதி; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் இருபத்துநான்கு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24.50பே.) கொண்டுள்ளதுடன், கல்கிஸ்ஸைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

### 161 ஆம், 1098 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் லக்ஷ உயன கிராமத்தில் அமைந்துள்ள காணியினதாய் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்டதும், அவரது கட்டுக்காப்பில் வைதிருக்கப்பட்டதும், எவ். சீ. பீ. இல. 07 இலுள்ள (வெளிக்களத் தாள் இல. எல்/பீஓ 405) எவ். சீ. பீ. பீஓ 32 இல் 108 ஆம் இலக்கக் காணித்துண்டம் என அடையாளமிடப்பட்டதும், அனௌலந்தாவ என அழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : காணித்துண்டங்கள் இல. 111 மற்றும் 107; கிழக்கில் : காணித்துண்டம் இல. 107; தெற்கில் : காணித்துண்டம் இல. 84 மற்றும் ; மேற்கில் : காணித்துண்டங்கள் இல. 109 மற்றும் 111; பரப்பளவில் இது. அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் நான்கு ஏழு (0.4047ஹெக்.) ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் பொலன்னறுவைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

6-616/1

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2009.11.12 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

"1 பிரசித்த நொத்தாரிசு சீ. எம். பலல்ல அத்தாட்சிப்படுத்திய 1997.12.17 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 12733 இன் பேரில் போஹின்கமுவ, குளியாபிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. போத்தலகே ஜோசப் பஸில் பெர்ணாண்டோ என்பவரிடமிருந்து முதலும் 2009.09.29 வரை வட்டியும் ஏழு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முப்பத்தைந்து ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 7,93,035.28) அத்துடன் ஏழு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா (ரூ. 7,40,000) மீது ஆண்டுக்கு பத்து (10%) வீதத்தில் 2009.09.30 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாகவும் உள்ளதாலும்,

மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட முறி இல. 12733 ஆல் காப்பளித்து ஈடுவைக்கப்பட்ட சொத்தை விற்பதற்கு இல. 4டீ, ரத்குரு மாவத்தை, சிலாபம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டி. எல். ஜே. நிஸ்ஸங்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பற்று யட்டிகஹகோரளை தெற்கில் போஹின்கமுவயில் அமைந்துள்ளதும் 1986.12.12 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட

வரைபடத்தில் உபபிரிவாக்கப்பட்டதும் மீகஹமுலவத்த அல்லது பாரகாவவத்த என அழைக்கப்படும் காணிக்கான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சரத் வெலகெதர தயாரித்த 1984.09.07 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3124 இல் விபரித்த துண்டு 1D என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்தகாணித்துண்டு வடகிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1E உம் ; தென்கிழக்கில் : துண்டு 1F அடையாளமிட்ட ரோட்டும் ; தென்மேற்கில் : துண்டு 1C உம் ; வடமேற்கில்: வி. எம். டி. தென்னக்கோன் மற்றும் ஏனையோரின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 8பே.) விஸ்தீரணமுடைய, காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் J 57/220 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட போஹின்கமுவயில் அமைந்த மீகஹமுலவத்த அல்லது பாரகாவவத்த என அழைக்கப்படும் காணியின் 1986.12.12 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3124 இல் விபரித்த துண்டு 1E என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடகிழக்கில் : டி. எம். டி. தென்னக்கோன் மற்றும் ஏனையோரின் காணியும் ; தென்கிழக்கில் : துண்டு 2 உம் ; தென்மேற்கில் : ரோட் என அடையாளமிட்ட துண்டு J உம் துண்டு 1D உம் ; வடமேற்கில் டீ. எம். டி. தென்னக்கோன் மற்றும் ஏனையோரின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 8பே.) விஸ்தீரணமுடைய, காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மறறும் சகலதும் ஆகும். இது குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் J 57/221 இல் பதிவு செய்யப்பட்டது.

3. மேற்குறிப்பிட்ட போஹின்கமுவயில் அமைந்த மீகஹமுலவத்த அல்லது பாரகாவவத்த என அழைக்கப்படும் காணி வரைபடம் இல. 3124 இல் விபரித்த துண்டு 1F என அடையாளமிட்ட பாதை வடகிழக்கில் : துண்டு 1E உம் ; தென்கிழக்கில் : துண்டுகள் 2 மற்றும் 3 உம் ; தென்மேற்கில் : குளியாபிட்டிய நாரம்மல பிரதான ரோட்டும் ; வடமேற்கில் துண்டு 1B, 1C, 1D உம் எல்லைகளாகக் கொண்டு பதின்மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணமுடையதும் பொதுவானதொரு வழிப்பாதையாக உபயோகிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் உரிமையையும். இது குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் J 57/222 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஐ. எம். எல். கருணாதிலக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
குளியாபிட்டிய கிளை.

6-597

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், கொழும்பு 3, கோல் பேஸ் கோர்ட், கூறு 34 இல் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், (இதனத்துப்பின்னர் "கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) எஸ்.டபிள்யூகே ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஜயசிங்க என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, மாச்சு 04 ஆந் திகதிய 247 ஆம் மற்றும் 2004, நவெம்பர் 25 ஆந் திகதிய 371 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது, வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், மேற்கூறப்பட்ட 247 ஆம் மற்றும் 371 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2010, மாச்சு 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று கோடியே ஆறு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நாநூற்று ஐம்பத்தெட்டுரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 3,06,32,458.68) கொண்ட தொகையும் 2010, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா (ரூ. 1,37,49,948) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6%) வட்டியும் அத்துடன் ஐம்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூற்று முப்பத்தாறு ரூபா (ரூ. 55,55,536) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியும் சொல்லப்பட்ட எஸ்.டபிள்யூகே ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து, இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று கோடியே ஆறு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நாநூற்று ஐம்பத்தெட்டுரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 3,06,32,458.68) கொண்ட தொகையும் 2010, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா (ரூ. 1,37,49,948) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு

உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6%) வட்டியும் அத்துடன் ஐம்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூற்று முப்பத்தாறு ரூபா (ரூ. 55,55,536) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 ஐந்து சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 247 ஆம், 371 ஆம் இலக்கங்களைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் பொறித்தொகுதி எந்திரத்தொகுதியும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**247 ஆம், 371 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டிக் கோளையின் பள்ளே பத்துவில் மொறட்டுவை நகர சபை எல்லைகளினுள் தெலவலவில் அமைந்துள்ளதும், கட்டுபெத்த, காலி வீதியில் 586 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தை தற்போது கொண்டதும், 'லேடி கதரின் குறாப்' எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. சின்னத்தம்பி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992, திசெம்பர் 10 ஆந் திகதிய 3810 ஆம் இலக்க வரைபடத்தில், அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் காணித் துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : மொடல் டவுண் வீதி; கிழக்கில் : உ. நி., எச். டபிள்யூ. பர்ணாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1965, ஏப்பிறல் 13 ஆந் திகதிய 3239 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 15சீ; தெற்கில் : காலி வீதியில் 584 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதாய் உ. நி., பி. மகேந்திரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1978, மாச்சு 6 ஆந் திகதிய 191 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 மற்றும் இலங்கை மின்சாரச் சபையின் ஆதனம் அத்துடன் ; மேற்கில் : காலி வீதி; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 3810 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் இருபத்துநான்கு தசம் நான்கு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 24.45பே.) கொண்டுள்ளதுடன், தெஹிவளை-கல்கிஸ்ஸைக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பின்வருவதிலும் அதன்மீதும் அதுநெடுகிலுமான பாதையுரிமையுடன் சேர்த்து :-

மேற்கூறப்பட்ட தெலவலவில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம். பர்ணாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1965, ஏப்பிறல் 13 ஆந் திகதிய 3239 ஆம் இலக்க வரைபடத்தில், குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 15எச் என அடையாளமிடப்பட்டதும் (40 அடி அகலம்), பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 15எச் பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : 3239 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 15பீ, 15சீ, 15டீ, 15ஈ, 15எவ் மற்றும் 15ஜீ; கிழக்கில் : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். டபிள்யூ. பர்ணாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1962, யூலை 31 ஆந் திகதிய 2833 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 14; தெற்கில் : சொல்லப்பட்ட 3239 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 15ஐ, 15ஜே, 15கே, 15எல், 15எம் மற்றும் 15 என் அத்துடன்; மேற்கில் : கொழும்பு-காலி வீதி; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 3239 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு றூட் முப்பது தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 30.05பே.) கொண்டுள்ளதுடன், தெஹிவளை-கல்கிஸ்ஸைக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

6-616/2

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பொலன்னறுவையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், (இதனத்துப்பின்னர் ''கம்பனி'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான)சேவாகம ரைஸ் புறொடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எம். ரெளவ் என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, மே 25 ஆந் திகதிய 1811 ஆம் மற்றும் 2009 மே, 13 ஆந் திகதிய 1804 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது, வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், மேற்கூறப்பட்ட 1811 ஆம் மற்றும் 1804 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று கோடியே எட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து தொண்ணூற்று ஐந்து ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூ. 3,08,25,095.32) கொண்ட தொகையும் 2010, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று கோடி ரூபா (ரூ. 3,00,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பத்து தசம் ஐந்து சதவீத (10.5%) வட்டியும் சொல்லப்பட்ட கம்பனியிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ.

நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள அசைவுள்ள பொறித்தொகுதியையும் எந்திரத் தொகுதியையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று கோடியே எட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து தொண்ணூற்று ஐந்து ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூ. 3,08,25,095.32) கொண்ட தொகையும் 2010, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று கோடி ரூபா (ரூ. 3,00,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பத்து தசம் ஐந்து சதவீத (10.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1811 ஆகிய இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் பணிப்பாளரொருவராகவுள்ள வெலிவிட்ட டொன் குசுமித்த முதித பெரேரா என்பவரினாலும் 1804 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் கம்பனியினாலும் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் பொறித்தொகுதி எந்திரத்தொகுதியும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1811 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெத பத்துவிலுள்ள சேவாகம கிராம அலுவலர் பிரிவில் சேவாமுக்த ஜனபதய கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்டு அவரது கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட வரைபட இல. எவ். சீ. பீ. பீஓ 13 இல் காணித்துண்டம் 920 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : காணித்துண்டம் 828; கிழக்கில் : காணித்துண்டம் 921; மேற்கில் : காணித்துண்டங்கள் 911 மற்றும் 912 ; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் இரண்டுஏக்கர் மூன்று றூட் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (2ஏ. 3றூ. 24பே.) கொண்டுள்ளதுடன், பொலன்னறுவைக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மிக்க அண்மைக்காலத்திய நிலஅளவையொன்றின்படி மேலேயுள்ள காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெத பத்துவிலுள்ள சேவாகம கிராம அலுவலர் பிரிவில் சேவாமுக்த ஜனபதய கிராமத்தில் அமைந்துள்ளதும், சீ. படுஎலிதமன" எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. பி. இலங்கசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.02.15 ஆந்திகதிய வரைபட இல. 2009/பீஓ/045ஏ இல் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : எச் டப்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 912 மற்றும் எச்சீபீ பீஓ 13 இலுள்ள காணித்துண்டம் 828 (வீதி - பிரதேச சபை) மற்றும் எவ்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 921 ; கிழக்கில்: எவ்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 828 (வீதி- பிரதேச சபை) மற்றும் எவ்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 921 ; தெற்கில் : எவ்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 921 மற்றும் எவ்சீபீ பீஓ15 இலுள்ள காணித்துண்டம் 28 மற்றும் ; மேற்கில் : எவ்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 911 மற்றும் எவ்சீபீ பீஓ13 இலுள்ள காணித்துண்டம் 912. பரப்பளவில் இது. அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் இரண்டுஏக்கர் மூன்று றூட் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (2ஏ. 3றூ. 24பே.) கொண்டுள்ளது.

### 1804 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

பின்வருவனவுட்பட அசைவுள்ள பொறித்தொகுதி எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் முழுவதும் :-

1. சேவாகம ரைஸ் புரொடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தில் நிறுவப்பட்ட ஏலவேயுள்ள எந்திரத்தொகுதியும் சாதனங்களும்.

அரையவியல் அரிசி ஆலை

| இல. | விவரணம் | தயாரிப்பு | கொள்ளளவு |
|---|---|---|---|
| 1. | நெல் சுத்திகரிப்பான் | இலங்கை | கி. கி. 2500 |
| 2. | பொய்லர் | ஐஇ | கி. கி. 4500 |
| 3. | உலர்த்தி - 01 | இலங்கை | தொன் 12 |
| 4. | உலர்த்தி - 02 | இலங்கை | தொன் 32 |
| 5. | கூலர் | இலங்கை | கி. கி. 800 |
| 6. | நெல் சுத்திகரிப்பான் | இந்தியா | கி. கி. 300 |
| 7. | நெல் ஹஸ்க்கர் | இந்தியா | கி. கி. 4500 |
| 8. | ஹலர் | சீனா | கி. கி. 2500 |
| 9. | ஜெட் பொலிஷர் - 01 | சீனா | கி. கி. 2000 |
| 10. | ஜெட் பொலிஷர்- 02 | சீனா | கி. கி. 2000 |
| 11. | கல்லகற்றி - 01 | இலங்கை | கி. கி. 2500 |
| 12. | கல்லகற்றி - 02 | இலங்கை | கி. கி. 2500 |
| 13. | சில்க்கி பொலிஷர் | இந்தியா | கி. கி. 4000 |
| 14. | தரப்படுத்துகருவி | இந்தியா | கி. கி. 4000 |
| 15. | அமுக்கி | இந்தியா | |
| 16. | வேபிரிஜ் - 40தொன் | ஐஇ | |
| 17. | நெல் ஹஸ்க்கர் (ட) | இந்தியா | கி. கி. 3000 |
| 18. | உயர்த்தி - அடி 25 உயரம் | இலங்கை | |
| 19. | உயர்த்தி - அடி 34 உயரம் | இலங்கை | |
| 20. | உயர்த்தி - அடி 32 உயரம் | இலங்கை | |
| 21. | உயர்த்தி - அடி 28 உயரம் | இலங்கை | |
| 22. | உயர்த்தி - அடி 29 உயரம் | இலங்கை | |
| 23. | உயர்த்தி - அடி 29 உயரம் | இலங்கை | |
| 24. | 9உயர்த்திக்கான - | இலங்கை | 21 அடி |

பச்சையரிசி ஆலை

| இல. | விவரணம் | தயாரிப்பு | கொள்ளளவு |
|---|---|---|---|
| 1. | நெல் சுத்திகரிப்பான் (அதிர்வு) | இலங்கை | கி. கி. 2500 |
| 2. | 2 நெல் சுத்திகரிப்பான்கள் | இலங்கை | கி. கி. 2500 |
| 3. | நெல் ஹஸ்க்கர் | இந்தியா | கி. கி. 4000 |
| 4. | நெல் தனிவேறாக்கி | இலங்கை | கி. கி. 4000 |

| இல. | விவரணம் | தயாரிப்பு | கொள்ளளவு |
|---|---|---|---|
| 5. | 2 அப்ரேசிவ் பொலிஷர்கள் | இலங்கை | கி. கி. 1500 |
| 6. | N-120 பொலிஷர் | சீனா | கி. கி. 2500 |
| 7. | தரப்படுத்து கருவி | இலங்கை | கி. கி. 3000 |
| 8. | உயர்த்தி - 37 அடி உயரம் | இலங்கை | |
| 9. | 3 உயர்த்திகள் | இலங்கை | அடி 25 |
| 10. | 6 உயர்த்திகள் | இலங்கை | அடி 21 |

2. சேவாகம ரைஸ் புரொடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தில் நிறுவப்பட்டு நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேசிக்கப்பட்ட எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்கள்.

| இல. | விவரணம் |
|---|---|
| 1. | நவீனமயமாக்கப்பட்ட மாசுபடுத்தலற்ற நெல் சுத்திகரிப்பு முறைமை |
| 2. | செய்முறை நீர்ப் பரிகரிப்பு முறைமையும் கழிவுநீர்ப் பரிகரிப்பு முறைமையும் |
| 3. | நவீன அரையவியல் முறைமையும் நெல் உயர்த்தும் முறைமையும் |
| 4. | புகையகற்றல் முறைமையுடன் நவீனமயமாக்கப்பட்ட நீராவிப் பிறப்பாக்கி |
| 5. | நவீனமயமாக்கப்பட்ட நீராவி விநியோகிப்பு முறைமை. |

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

6-616/3

---

## இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

“1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், (இதனத்துப் பின்னர் “கம்பனி” எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கம்பளையில் கொண்டுள்ள துமான ஷெட்னா போல்ட்ரி பாம் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனமும் கலபத்துகே சங்க்க வசங்க ஜினதாச என்பவரும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். எஸ். விஜேசேக்கர என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1997, ஒற்றோபர் 22 ஆந் திகதிய 939 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் மீதும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எஸ். விஜேசேக்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, ஏப்பிறல் 1 ஆந் திகதிய 1007 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீதும், பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, சனவரி 12 ஆந் திகதிய 1187 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவு களைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், அத்துடன் கம்பனியும், கலபத்துகே சங்க்க வசங்க ஜினதாச, ஹெட்டிஹேவகே இந்திரா ஜினதாசஆகியோரும், பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, சனவரி 12 ஆந் திகதிய 1188 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும் மேற்கூறப்பட்ட 1188 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது 2008, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே அறுபத்தேழு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்தொன்பது ரூபா (ரூ. 1,67,24,359) கொண்ட தொகையும் 2008, ஏப்பிறல் 2 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை எண்பத்துமூன்று இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து முந்நூறு ரூபா (ரூ. 83,33,300) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளின் மீளாய்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு பதினொரு சதவீத (11%) வட்டியும் சொல்லப்பட்ட கம்பனிடயிடமிருந்து கலபத்துகே சங்க்க வசங்க ஜினதாச, ஹெட்டிஹேவகே இந்திரா ஜினதாச மற்றும் கலபத்துகே ஜினதாச என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், அத்துடன் 2008, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாக 939 ஆம், 1007 ஆம் மற்றும் 1187 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது நான்கு கோடியே அறுபது இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தெட்டு ரூபா மூன்று (ரூ. 4,60,49,858.03) கொண்ட தொகையும் 2008, ஏப்பிறல் 2 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை முப்பத்தாறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபா (ரூ. 36,34,112) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் ஏப்பிறல் 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளின் மீளாய்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6%) வட்டியும் ஒரு கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூற்று ஐம்பது ரூபா (ரூ. 1,91,66,550) கொண்ட தொகை மீது ஆண்டொன் றுக்கு 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் ஏப்பிறல் 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளின் மீளாய்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு பதினொரு சதவீத (11%) வட்டியும் சொல்லப்பட்ட கம்பனியிடமிருந்து கலபத்துகே சங்க்க வசங்க ஜினதாச என்போரிடமிருந்தும் இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர்

திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும், என்வற்றின் மீதுள்ள பொறி, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அனைத்தையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஆறு கோடியே இருபத்தேழு இலட்சத்து எழுபத்துநான்காயிரத்து இருநூற்று பதினேழு ரூபா மூன்று சதம் (ரூ. 6,27,74.217.03) கொண்ட மொத்தத் தொகையை, 2008, ஏப்பிறல் 2 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை முப்பத்தாறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபா (ரூ. 36,34,112) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் ஏப்பிறல் 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளின் மீளாப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6%) வட்டியுடனும் இரண்டு கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பது ரூபா (ரூ. 2,74,99,850) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் ஏப்பிறல் 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளின் மீளாப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு பதினொரு சதவீத (11%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 939, 1007, 1188 மற்றும் 1187 ஆம் இலக்கங்களைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் சாதனமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 939, 1007 மற்றும் 1187 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கம்பளைப் பதிவு மாவட்டத்தினுள்ளும் கண்டி அரசிறை மாவட்டத்தினுள்ளும் உடபலாத்த கங்க இஹல கோரளையிலுள்ள கம்பளைவெலவில் அமைந்துள்ளவையும், மரியாவத்தைத் தோட்டத்தின் மரியாவத்தைப் பிரிவின் பாகங்களாக உள்ளவையும், பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவற்றினதும் அடக்கியுள்ளவற்றினதும் ஒன்று சேர்க்கையாகவுள்ளவையும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. ஜயாகொடை என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1976, மாச்சு 1 முதல் 14 வரையிலான தேதிகளைக் கொண்ட 1341 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவையும், காணிததுண்டங்கள் 1, 2, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என அடையாளமிடப்பட்டவையும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டவையுமான அணித்தாயுள்ள அக்காணித்துண்டுகள் அடங்கலும் - (அ) ஏ2- 0றூ. 0பே. பரப்பளவினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1966, சனவரி 7 ஆந் திகதிய மற்றும் மாச்சு 21 ஆந் திகதிய 1676 ஆம் இலக்க லரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு (ஆ) 3ஏ. 0றூ. 0பே. பரப்பளவினதாய் சொல்லப்பட்ட 1676 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு (இ) 11ஏ. 0றூ. 23பே. பரப்பளவினதாய் சொல்லப்பட்ட உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தலவத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1966, மாச்சு 16 ஆந் திகதிய 1706 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டவையும் காணித்துண்டங்கள் 1, 2 மற்றும் 3 என அடையாளமிடப்பட்டவையுமான காணித்துண்டுகள் (ஈ) 5ஏ. 3றூ. 2பே. பரப்பளவினதாய் சொல்லப்பட்ட உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1966, மாச்சு 18 ஆந் திகதிய 1707 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டங்கள் 1, 2 மற்றும் 3 என அடையாளமிடப்பட்டவையுமான காணித்துண்டுகள், மற்றும் (உ) 13ஏ. 0றூ. 26பே. பரப்பளவினதாய் சொல்லப்பட்ட உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தலவத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1966, மே 13 ஆந் மற்றும் 25 ஆந் திகதிய 1736 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவையும் காணித்துண்டங்கள் 1, 2 மற்றும் 3 என அடையாளமிடப்பட்டவையுமான காணித்துண்டுகள் ; அத்துடன் சொல்லப்பட்ட 1341 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டங்கள் 1, 2, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என அடையாளமிடப்பட்டவையும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டவையுமான அணித்தாயுள்ள சொல்லப்பட்ட காணித்துண்டுகள் ; ஒன்றுக்கொன்று அடுத்துள்ளதுடன் ஆதனமொன்றாகவமைந்து, சொல்லப்பட்ட 1341 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்றாய் பின்வரும் எல்லைகளையும் கொண்டுள்ளது - வடக்கின் அரசுக்குச் சொந்தமான காணியும் எஞ்சியுள்ள பாகமும் காணித்துண்டம் 3 டைத் தனிவேறாக்கும் வீதியும்; கிழக்கில் : மகாவலிகங்கை ; தெற்கில் : எஞ்சியுள்ள பாகமும் வீதியும்; மற்றும் மேற்கில் : ராஜ எலவும் எஞ்சியுள்ள பாகமும் ; பரப்பளவில் இது, கூட்டுமொத்தத்தில் 'ஷெட்னா போல்ட்ரி பாம்' எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான பறவைப் பண்ணை, பறவைக் கொட்டில்கள், அடைகாப்பதற்கான கட்டிடங்கள், தீனி கலக்குதல் மற்றும் முட்டை அறை, அலுவலகக் கட்டிடம், வீடுகள், ஊர்திச் சாலை, தச்சுவேலைக் கொட்டில், தொட்டிகள், மின்மாற்றிகள், கிணறு, மரங்கள், பயிர்கள் மற்றும் அதன்மீதுள்ள வேறெல்லாம் என்பவற்றுடன் சேர்த்து, முப்பத்தைந்து ஏக்கரையும் பதினொரு பேர்ச்சஸ்களையும் (35ஏ. 0றூ.11பே.) கொண்டுள்ளதுடன், கம்பளை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| விவரணம் | அளவு |
|---|---|
| இன்கியூபேட்டர் மற்றும் செட்டர் ஜேம்ஸ்வே - (கனடா) ஒவ்வொன்றினதும் கொள்ளளவு 15/20 குஞ்சுகள்/அடைக்காப்பான் | 04 |
| செங்குத்தான தீனி கலப்பான் பிரிசிஷன் (இந்தியா) கொள்ளளவு ஒரு மணித்தியாலயத்துக்கு/3 தொன் | 02 |
| மின்பிறப்பாக்கி டேல் (கனடா) | 01 |
| தானிய முறைமை கூட்டிணைக்கப்பட்ட யூஎஸ்ஜ சைலோ முறைமை - மாதிரி என்சீஎல் 24-14 யூஓ | 01 |
| செயின் பீடர் ஹவுசிங் முறைமை | 02 |

### 1188 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தின் கம்பளைப் பதிவுப் பிரிவிலுள்ள கங்க இஹல கோறளையில் கம்பளைவெலவில்

அமைந்துள்ளதும், பரப்பளவின் ஐந்து ஏக்கர்களை (5ஏ. 0றூ. 0பே.) கொண்டுள்ளதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1966, மாச்சு 18 ஆந் திகதிய மற்றும் 21 ஆந் திகதிய 1704 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், மரியாவத்த தோட்டத்தின் மரியாவத்த பிரிவின் ஒரு பாகமாகவுள்ளதும், குறிப்பானதும் பிரிக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட வரைபடத்தின்படி அதன் எல்லைகள் பின்வருமாறு - வடகிழக்கில்: எஞ்சியுள்ள பாகத் துக்கு அருகாமையிலுள்ள ஒரு வீதி; தென்கிழக்கில் : சொல்லப்பட்ட உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1707 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துகாட்டப்பட்ட எஞ்சியுள்ள பாகம் ; தென்மேற்கில் : எல ஒதுக்கும் சொல்லப்பட்ட நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1676 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட ஓர் எஞ்சியுள்ள பாகத்துக்கு அருகாமையிலுள்ள தோட்ட வீதியும்; மேற்கில் : அதே தோட்ட வீதி; அத்துடன் கம்பளைக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| விவரணம் | அளவு |
|---|---|
